தாகக்கிரம 2

17, நவம்பர், 80 ★ மாத இதழ் ★ விலை ரூபா 1-00

"சமத்துவ சமதர்ம சமுதாயம் ஏற்பட்டால் அன்றி, மனித வர்க்கத்திற்கு, பசிப்பிணியிலிருந்தும், யுத்தத்திலிருந்தும், கோடானு கோடி மக்களை வாட்டி வதைக்கும் இல்லாமையிலிருந்தும் விடுதலை இல்லை."

—லெனின்

அபிவிருத்தியா, அடகு வைப்பா?

★ ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் பதுளை மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 200 கோடி ரூபாவை கடனாக வழங்க மேற்படி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

★ உலக வங்கியின் கடனுதவித் திட்டத்தின் கீழ் வாழைச்சேனை, கல்முனை, அக்கரைப்பற்று பஸ்டிப்போக்கள் நவீனமயப்படுத்தப்படும்.

★ திருக்கோணமலையில் பாரிய அளவில் தண்ணீர் விநியோகத்திட்டம் மேற்கொள்ள பிரெஞ்சு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட உள்ளது.

★ திருக்கோணமலையில் பெற்றோல் சுத்திகரிப்பு நிலையத்தை "றிசாகோ" பல்தேசிய கூட்டுத்தாபனம் நிறுவும்.

★ வடபகுதியின் அபிவிருத்திக்கு உலகவங்கியிடம் 400 கோடி ரூபா நிதி உதவி கோரப்படும்.

★ மன்னார் கடலில் எண்ணெய்வள ஆய்வுக்கு, அமெரிக்க நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ளவற்றை படித்தவுடன், "நமது பகுதிகள்தானே அபிவிருத்தி செய்யப்படுகின்றன," "நமக்குத்தானே வேலைகள் வழங்கப்படும்." என்ற எண்ணங்களே உங்களுக்குத் தோன்றும்–ஆனால் உண்மை என்ன? அபிவிருத்தியென்ற பெயரில் என்ன நடைபெறும்? நமக்கு ஏற்படும் இழப்புகள் என்ன? என்பதை இவ்வாய்வு உங்களுக்கு கூறுகின்றது. உதாரணத்திற்கு ஒன்றை இங்கே குறிப்பிடுகின்றோம். 26–10–80 சிந்தாமணி தனது தலைப்புச் செய்தியாக, "போக்கு வரத்துச் சபைகளில் புதிய நியமனங்கள் இல்லை–உலக வங்கி சிபார்சை அடுத்து அரசு நடவடிக்கை" – என வெளியிட்டுள்ளது.

"அணைக்கட்டுகள் கட்டி முடிக்கப்பட்ட பிறகும் தண்ணீர் விவசாயிகளைச் சென்றடைய பத்து வருஷங்களுக்கும் மேலாகிறது. பெரும்பாலான இடங்களில் நிலைமை இதுவாகவே இருக்கிறது" என்று உலக வங்கியின் தலைவர் திரு. ரொபர்ட் மெக்னமாரா தெளிவாகத்தான் சொல்கிறார்.

பாகிஸ்தானில் சிந்து நதியில் டார் பெலா அணைக்கட்டு ஒன்றினை அமைக்கப் பல கோடிக் கணக்கான டாலர் முதலீட்டில் 1968ல் உலகவங்கி நடவடிக்கை மேற்கொண்டது. அணைக்கட்டின் நிர்மாண வேலைகள் ஆரம்பமாகி ஏழு ஆண்டுகள் முடிந்த பின்னரும் கூட ஒரு சொட்டுத் தண்ணீரும் பாகிஸ்தானிய விவசாயியினைச் சென்றடையவில்லை. ஆனால் இத்தாலிய, பிரெஞ்சு, ஜெர்மன், சுவிஸ் நிறுவனங்களே உள்ளடக்கிய மிகப் பெரிய பன்னாட்டுக் கம்பெனிக்கு இப்பாரிய சிவில் எஞ்சினியரிங் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு அவர்கள் கொள்ளை லாபம் தேடிக் கொள்வது மட்டுமே உடனடியாகச் சாத்தியமாகியது. இந்த நீர்த்தேக்க நிர்மாணத்திற்காக இப் பகுதியிலிருந்து 80,000 பேரை பலவந்தமாக அப்புறப்படுத்திய வேலையும் சுமுகமாக முடிந்து விட்டது. இன்றும் தண்ணீரைத்தான் காணவில்லை.

மகாவலிகங்கை

உலக வங்கியின் மற்றுமொரு மகத்தான மகாவலி கங்கை அபிவிருத்தித்திட்டம் பற்றி டியூமொன்ட் (DUMONT) என்னும் பொருளாளர் சொல்வது நமது அவதானத்திற்குரியது

"பிறநாடுகளில் போலவே இலங்கையிலும் அந்நாட்டின் மிகப்பெரிய நதியான மகாவலியைத் திசைதிருப்புவதற்கு உலகவங்கி நிதியுதவியுள்ளது. வெளிநாட்டுச் செலவாணியைப் பொறுத்த மட்டில் இத் திட்டம் மிகவும் கூடிய செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு நிர்மாண நிறுவனங்களுக்குத் துரித கதியில் இத் திட்டம் நன்மை வழங்குமாயினும் இந்நாட்டிற்கு இத் திட்டத்தால் ஏதாவது பலன் கிடைப்பதற்கு மிக நீண்டகாலம் எடுக்கும். ஆனால் கண்டி மாவட்டத்தில் மட்டும் உடனடியாக வினைவு தரத்தக்க சிறிய நீர்த்தேக்கங்களைக் குறைந்த பட்சம் ஆயிரம் சிறு அணைக்கட்டுகளையாவது கட்டும் சாத்தியங்கள் நிறைய இருப்பதனை நான் அவதானித்தேன். இதற்கு அந்நியச் செலாவணி அவ்வளவாகத் தேவைப்படாது. மேலும் உள்நாட்டு உழைப்பையும் பெருமளவில் பாவிக்க முடியும். ஆனால் இன்று வரை உலகவங்கி இத்தகைய சிறிய நீர்ப்பாசன வேலைகளுக்கு நிதி உதவ மறுப்புத் தெரிவித்தே வந்துள்ளது."

'உலக வங்கி மாதிரி'யில் திட்டப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குருணாகலை, மாத்தளை, புத்தளம் மாவட்டங்களுக்கு நிதி வழங்க உலக வங்கி இணங்கியுள்ளது. யாழ் மாவட்டத்திலும் இத்தகைய ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ்

(7ம் பக்கம் பார்க்க)

மலையக மக்கள் அங்கும் - இங்கும்

கனவுகளுடனும், கற்பனைகளுடனும் தம் பயணங்களை ஆரம்பித்த இம்மக்களின், வாழ்வின் விடிவு நீண்டு கொண்டே இருக்கின்றது. இருநூறு வருடங்களுக்கு முன்பு கூலிகளாய் பிரித்தானியரால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டபோதும், கனவுகளுடன்தான் இவர்கள் தங்கள் பயணத்தை ஆரம்பித்தார்கள். இன்றும் கசப்பான அனுபவங்களுடன் ஒப்பந்தங்களின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டபோதும் கனவுகளுடன்தான் தங்கள் பயணத்தை ஆரம்பிக்கின்றார்கள். ஆனால் கனவுகள் தொடர்ந்தும் நொறுங்கிக் கொண்டே இருக்கின்றன. ஏமாற்றங்கள் தொடர்ந்த வண்ணமேஉள்ளன. அண்மைக்கால நிகழ்வுகள் இரண்டை உங்களுக்குத் தருகின்றோம். என்று இவர்கள் கனவுகளில் வசந்தம் வீசுகின்றதோ, வாழ்வில் 'பூபாளம்' இசைக்கப்படுகின்றதோ, அன்றுதான் 'ஈழம்' பரிணமிக்கும்.

அங்கு

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ், இங்கிருந்து மக்கள் மந்தைகள்போல் ஏற்றுமதி செய்யப்படுகின்றனர் என்பது அனைவருமறிந்ததே. இங்கே இம்மக்கள் புறப்படும்

(2–ம் பக்கம் பார்க்க)

வேடிக்கையான வேதனை!

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு, அனுதரவாக–அகதிகளாக வடபகுதியை நோக்கி வந்த சுமார் 2500 குடும்பங்களும் மீண்டும் மலையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட இருப்பதாக காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

செயளாளர் மேலும் தெரிவிக்கையில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது வாழும் இவர்கள் 2000 ஏக்கர் காணியை சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளதாகவும், இலங்கைப் பிரஜைகளாக இல்லாதிருப்பதாகவும் கூறியுள்ளார். அதனால் மீண்டும் மலையகப் பிரதேசங்களுக்கே இவர்கள் அழைத்துச் செல்லப்பட உள்ளதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால், சக்தியாய் உருவெடுக்கும் ★

எட்டியாந்தோட்டையில்

கொந்தளிப்பு

தோட்டத் தொழிலாளரின் பிரதிநிதி மார்தட்டிக் கொள்ளும் தொண்டமான், ஆட்சி யுறுப்பில் பங்கு கொண்டிருக்கும் இவ்வேளையில் தோட்டத் தொழிலாளர்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது; இதனால் இம்மக்களிடையே கொதிப்பும், கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது.

எட்டியாந்தோட்டை தேர்தல் தொகுதியில் உள்ள சமனித் தோட்டத்தில், தொழிலாளர் நிர்வாகத்தினால் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு பரிகாரம் காணும் முகமாக வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

எட்டியாந்தோட்டை கழனி தோட்டத்தில் தொடர்ச்சியாக 69 நாட்கள் நடைபெற்ற இவ் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு, தொழிற் சங்கத் தலைமைப்பீடமும், ஜனவசமமக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையும் பேச்சு வார்த்தைகளை நடத்தின. 26-9-80-ல் இடம் பெற்ற இப் பூர்வாங்க பேச்சு வார்த்தையில் விசாரணை முடியும் வரை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் விடுமுறையில் இருப்பர் என ஏற்றுக் கொள்ளப்பட்டது! அதன்படி அவர்கள் செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 4 வரை வேலைக்குச் செல்லவில்லை.

ஆனால் பேச்சு வார்த்தையின் முடிவுக்கிணங்க நடக்கத் தவறிய உத்தியோகத்தர்கள் கெலியாகளின் உதவியுடன் ஆதிரமூட்டக் கூடிய வகையில் செயற்பட்டுள்ளனர். அதாவது குடியிருப்பு லயன்களை உடைத்தும், தீ வைத்தும் உடைமைகளை கொள்ளையடித்தும், கோரத் தாண்டவம் ஆடியுள்ளனர்.

இதன் எதிரொலியை எட்டியாந்தோட்டை நகர்ப் பகுதிகளிலும் காணக் கூடியதாக இருந்தது. அந்தத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் கூட சம்பவம் நிகழ்ந்த போது அவ்விடத்தில் இருந்ததாகவும், நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக மோசமாக்கவே அவர் உதவியதாகவும் கருதப்படுகிறது. இது போன்ற செயல்களில் அவர் ஈடுபட்டார் என குற்றஞ்சாட்டப்படுவதும் இது தான் முதற்தடவையல்ல.

இதில் வேதனைக்குரியதான சம்பவம் என்னவென்றால் பாதிக்கப்பட்ட இத் தொழிலாளர்களையே பொலிசார் கைது செய்ததாகும். இதே போன்ற இன்னொரு சம்பவம் வீ-ஓயாத் தோட்டத்தில் அக்டோபர் 5-ம் நாள் நடந்ததாகத் தெரியவருகிறது; அங்கும் லயன்கள் கொளுத்தியடிக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டதனால் 16 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தகையபயங்கரச்செயல்களும், அடாவடித்தனங்களும் ஏற்கனவே உடபுசல்லாவையைச் சேர்ந்த கேப்டன் தோட்டத்திலும், தலவாக்கொல்லையைச் சேர்ந்த பார்ணக்கல் தோட்டத்திலும் நடைபெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

இப்படியான சம்பவங்களுக்கு மத்தியில், வேதனையுடன் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்கள், அதியுத்தமரின் ஆட்சியின் கீழ் தலைநிமிர்ந்து வாழ்கின்றோர்கள் என்று தலைவர்கள் இந்திய வரவேற்புகளில் முழங்கி வருவதையும் கேட்கக் கூடியதாகத்தான் இருக்கிறது.

மலையக மக்கள் ... (1-ம் பக்கத் தொடர்)

போதே இங்குள்ள அதிகாரிகளால் பல வாக்குறுதிகள் ஆசை வார்த்தைகள் கூறப்படுகின்றன. வீடும், நிலமும் வழங்கப்படும், வேலைகள் உங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன - காத்திருக்கின்றன. எனப் பலவற்றை அவர்கள் நம்புகின்றனர். தாங்கள் தங்கள் நாட்டிற்கு - மூதாதையரின் இடங்களுக்கு செல்கிறோம் என்று கனவுகளிலும் கற்பனைகளிலும் மிதக்கின்றனர். ஆனால் இவர்களுக்கு ஆந்திரா எது, கர்நாடகம், மத்திய பிரதேசம் என்பது எது, தமிழ் நாடு என்பது எது என்பது பற்றிய விபரங்கள் எதுவும் புரிவதில்லை; புரியவைக்கப்படுவதுமில்லை. இந்தியா என்றால் தமிழ் நாடு, தமிழ் நாடு என்றால் இந்தியா என்றே புரிந்துகொள்கிறார்கள். அங்கே அவர்களுக்கு, ஆந்திராவிலும், கர்நாடகத்திலும - நூற்பு ஆலைகளிலும் நெல் அரைக்கும் ஆலைகளிலும் வேலைகள் வழங்கப்படுகின்றன; வரட்சி நிரம்பிய பகுதிகள், அறிமுகமில்லாத மொழி கலாச்சார சுற்றுப் புறங்கள், வெயிலும் மழையும் குடிபுகுந்துகொள்ளும் குடிசைகள், வேறுபட்ட கால நிலைகள் அவர்களுக்கு அந்நியமாகி புதிய அனுபவத்தை வாழமுடியாத நிலையை ஏற்படுத்துகின்றன; அதாவது அவர்கள் அங்கு சென்ற உடனேயே வாந்திபேதி என்னும் நோயால் பீடிக்கப்படுகின்றனர். சிலர் இறந்தும் உள்ளனர், வைத்திய வசதியோ எதுவும் கிடையாது.

ஒரு குடும்பத்தில் 5 பேரானாலும் 10 பேரானாலும் ஒருவருக்குத்தான் வேலை வழங்கப்படுகின்றது; வேலைக்குச் சென்றால் மட்டுமே கூலி; ரூபா 3 - 10 பைசாவே வழங்கப்படுகின்றது. இந்நிலைமைகள் அவர்களுக்கு வெறுப்பையும், விரக்தியையும், கோபத்தையும் ஏற்படுத்துகின்றன. இதனால் அவர்கள் நிவாரணம் கோரி திர்வைத் தேடி தமிழ் நாட்டிற்கு ஓடி வருகின்றனர்.

இப்படித்தான் அண்மையில் ஆந்திரா மாநிலத்தில் உள்ள ''குண்டக்கல்'' என்னும் இடத்தில் இருந்து 52 குடும்பங்கள் சென்னைக்கு ஓடிவந்து புனர்வாழ்வுத்துறை அமைந்துள்ள ''எழிலகம்'' கட்டிடத்தை முற்றுகை இட்டு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்; இவர்கள் போராட்டம் எவ்வித பயனையும் அளிக்காத நிலையில் திரும்பவும் ஆந்திராவுக்கே புனர்வாழ்வுத்துறை அதிகாரிகளினால் அனுப்பப்பட்டுள்ளனர். இதேபோல் 5 - 6 மாதங்களுக்கு முன்பும் ஆந்திரா மாநிலத்தின் ''செரளா'' என்னும் இடத்தில் இருந்தும் சென்னைக்கு வந்து உண்ணாவிரதம் இருந்தனர். இப்பிரச்சனையும் அதிகாரிகளினால் புறக்கணிக்கப்பட்டது. அங்குள்ள பத்திரிகைகளும், இயக்கங்களும் கூட இவர்கள் பிரச்சனையில் அனுதாபம் காட்டவில்லை. இவ் அவல நிலைக்கு தீர்வு அவர்கள் ஆண்டாண்டு காலம் உழைத்த மண்ணில் தமது உடைமைப்பாட்டுக்காக போராடுவதே;

இங்கு

''நட்சா'' (தேசிய மாற்றுப் பயிர்ச் செய்கை, குடியேற்ற அதிகார சபை) என்னும் புதிய அமைப்பின்கீழ் சுவீகரிக்கப்பட்ட தோட்டங்களில் இருந்த மலையக மக்களை - தொழிலாளர்களை வெளியேற்ற மறைமுகமாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ்வமைப்பு ''யுனெஸ்கோ'' நிறுவனத்தின் மூலமாகவும் வழங்கப்பட உள்ள உதவிப் பணத்தைக் கொண்டு தோட்டங்களில் தேயிலைக்குப் பதில் மாற்றுப் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்கவும் கிராமங்களாக மாற்றவும்-திட்டங்கள் வகுக்கப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. தோட்டங்களை ''கிராமத்தவர்களுக்கு'' (சிங்கள மக்கள்) வழங்குவதன் மூலம், இத்தோட்டங்களையே ஆண்டாண்டு காலம் நம்பி வாழ்ந்த மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன. இத் திட்டங்களின் காரணமாக பெருந் தோட்டங்களில் சிங்களத் தொழிலாளர்கள் குடியமர்த்தப்பட்டதன்பின் தொடர்ச்சியாக தோட்டப் பகுதிகளில் இம்மக்கள் 'இன ரீதியாக'' இனம் காணப்பட்டு தாக்கப்பட்டும், வீடுகள் கொளுத்தியடிக்கப்பட்டும், தொடர்ச்சியான சம்பவங்கள் நடைபெறுகின்றன. இப்படியான சம்பவமே அண்மையில் எட்டியாந்தோட்டையில் நடைபெற்றது. இதனை அரசு மறைத்துவிட்டது, பத்திரிகைகளும் செய்தியை வெளியிடவில்லை. இதைப்போன்றே இதற்கு முன்பும் ''டெவன் தோட்டத்தில்' மலையக மக்கள் தாக்கப்பட்டனர்; அத்துடன் அண்மைக்கால தோட்ட நிர்வாகங்களுக்கான நியமனங்கள் தமிழ் மொழி தெரியாதவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் சிங்கள மொழியில் எவ்வித அறிவாற்றலும் இல்லாததால் அவர்களுக்கு தோட்ட நிர்வாகங்களோடு தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்வதில் சிக்கல்களுக்கும், சிரமங்களுக்கும், உள்ளாக்கப்படுகின்றனர். இம்மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்ட தொடக்க காலங்களில் இதனை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த மக்களுக்கு எதிரான துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் 'சிவனுலட்சுமணன்' இறந்ததும் நாம் நினைவில் நிறுத்தவேண்டியதே; கிராம மயமாக்கலின் பின் மலையகத் தமிழர்கள் தமது தனித்துவத்தைப் பேணி பலம்பெற்று காணப்பட்ட நிலை மாறி அவர்கள் அஞ்சி வாழும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்;

புறப்படு பின்னர்!

ஓ! பேச்சாளர்களே,
பேசாதவர்களே!
கலப்பை பிடித்தவன் கண்ணீரில் வாழ - அவன்
உழைப்பை உண்டு மற்றொருவன்
இரைப்பை நிரப்பிடும் நிலையினைக் கண்டு
நீதி கேட்கின்ற நியாயவாதிகளே!
ஆங்காங்கே எத்தனையோ
பொறுப்பற்ற செயல்முறைகள்
காணப் பொறுக்காது பொங்கி எழுவோரே
தங்களுக்கென் வாழ்த்துக்கள்!.... மட்டுமல்ல
அறிவை நோய்க்கு மருத்துகட்டி ஆறாது,
புற்றுநோய்க்குப் புறச்சிகிச்சை கிடையாது.
அறிவீர்! தெளிவீர்!!
அக்குவேறு ஆணிவேருய்
எங்கள் தேசத்தைப் பிய்த்துப் பார்த்து
''அதன் வர்க்க தளத்தை உடைத்தாலன்றி''
தோழர்களே,
புற்றுநோய்க்குப் புறச்சிகிச்சை இல்லை,
சத்திர சிகிச்சை நடத்தினால் அன்றி
மற்றனவை யாவும் வெற்றுக் கூச்சலே!
மாற்றம் காணும் மார்க்கம் இதுவே
எங்கள் ஈழம் எவர்க்கும் பொதுவே
பொங்கி எழுந்து நீ வந்திட வேண்டாம்
பொறுத்துச் சிந்தி ... புறப்படு பின்னர்.

— பாமுகன்

சாதியும் - தார்மீகமும்

மூடிக்கிடக்கும் ஆலயக்கதவுகள் திறக்கப்பட்டு, அடக்கப்படும் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்ற ''தார்மீக'' முயற்சிகள் மேற்கொள்ளப்படும் வேளையில், பத்திரிகைச் செய்திகள் சில கவனத்தை கவருகின்றன;

கடந்த மாதம் இடம் பெற்ற வாணி விழாவில் நடந்த சம்பவம் சிறிதாயினும் முக்கியத்துவம் பெறுகின்றது. அதுவும் அறிவைப் போதிக்கின்ற ஆசிரியர்கள் அறிவுச்சாலையின் பெயருக்கே களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டமையை அறியும் எந்த மனிதனும் கவலை கொள்ளாமல் இருக்கமுடியாது.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் நடந்த வாணி விழாவின் போது சில மாணவ மாணவிகள், புறக்கணிக்கப்பட்டு அவமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் அவர்கள் சாதியில் குறைந்தவர்கள், அதாவது அடக்கப்படும் வர்க்கத்தினரை சார்ந்தவர்கள் என்பதே, ஆனால் அம்மாணவர்கள் விழாவில் பங்கு பற்றுதலுடன் வகுப்புகளையும் பகிஷ்கரித்துள்ளனர்; ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வரை தாம் இம்முடிவை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார்கள், இது அவர்களின் போராட்ட முனைப்புடன் கூடிய நியாய சிந்தனையே எடுத்துரைக்கின்றது.

இது மட்டுமல்ல; இதே கால கட்டத்தில் பளையில் தேநீர் கடையொன்றில் தேநீர் கொடுக்க மறுக்கப்பட்ட சம்பவமும் இடம் பெற்றுள்ளது; இன்னும் பல புகைந்த வண்ணம் இருக்கின்றன.

இதே வேளையில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில், சாதியால் ஒதுக்கப் படுபவர்களுக்கு உரிய பிரதிநித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் சிலரால் எழுப்பப்பட்டுள்ளது. இதுவும் நமது கவனத்தை ஈர்ந்துள்ளது.

வரப்போகும் மாவட்ட சபைத் தேர்தல் அடக்கப்படும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணுமா? என்ற கேள்வியையே நாம் எழுப்ப வேண்டியுள்ளது. முப்பது வருட கால அனுபவங்கள் இன்னும் படிப்பினையை தரவில்லையா? இது வரை எந்த சமூகப் பிரச்சனைகளுக்குத்தான் தீர்வு காணப்பட்டுள்ளது. வெறும் அதிகார கைமாற்றம் அடிப்படைப் பிரச்சனைகளை எப்படித் தீர்த்து வைக்கும்? பொருளாதார ரீதியில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் சமூக உறவுகள் (எஜமான் - அடிமை) சீர்மைக்கப்படாதவரை இப் பிரச்சனைக்கு தீர்வு கண்டுவிட முடியுமா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சைப்பிரஸில் துருக்கியர்களும்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பல்வேறு தன்பங்களுக்கும் உள்ளாகியிருக்கும் மக்களின் நிலையை எவ்வாறு விடுவிப்பது? ஓரளவு மக்கள் எல்லோருக்கும் சைப்பிரசில் என்ன நடந்தது என்று தெரியும். 300வருடங்களுக்கு மேலாக ஆட்சியை மேற்கொண்டதன் பின் 1878ல்; ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து துருக்கியைப் பாதுகாப்பது என்ற உத்தரவாதத்தின் பேரில் தனது நன்மைக்காகத் துருக்கி, சைப்பிரஸ் நிர்வாகத்தை பிரித்தானியாவிடம் ஒப்படைக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. அந்நேரத்தில் சைப்பிரஸ் துருக்கியர் மொத்த சனத்தொகையில் 1/3 பகுதியினராகக் காணப்பட்டனர். ஒப்பந்தச்சட்டம் முடிவடைந்தபின் சைப்பிரசை துருக்கியிடம் ஒப்படைப்பதற்கு பிரித்தானியா மறுத்துவிட்டது மட்டுமல்லாது, துருக்கி முதலாம் உலக யுத்தத்தின் போது ஜேர்மனியுடன் சேர்ந்து கொண்ட போது பிரித்தானியா சைப்பிரசைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு அதனை ஒரு முடிக்குரிய குடியேற்ற நாடாக்கியது.

1950களின் முற்பகுதிவரை சைப்பிரஸ் அமைதியாகப் படிப்படியாக வளர்ச்சியடையும் ஒரு காலனித்துவநாடாக இருந்து வந்தது. அவ்வேளை சைப்பிரஸ் கிறிஸ்தவர் பிரித்தானியா நிர்வாகத்தின் சலுகைக்கு உட்பட்டவர்களாக இருந்தனர். துருக்கிய சமூகத்தவரின் உழைப்பில் அவர்கள் வேகமாகச் செழிப்படைந்தார்கள். துருக்கியர் பிரித்தானியருக்கு விசுவாசமாக இருந்த போதும் அவர்கள் ஒதுக்கப்பட்டனர் கைவிடப்பட்டனர். தம்மைக் ஹெலனியர்கள் என்று கருதிக் கொண்ட சைப்பிரஸ் கிரேக்கர்கள் சைப்பிரசை கிரேக்கத்துடன் இணைப்பதற்கான பலாதகார அரசியல் இயக்கத்தினை நடத்தியதன்மூலம் பிரித்தானியர்களுக்கு நல்ல வர்சனாயினர். ஆனால் வரலாற்றில் சைப்பிரசும் கிரேக்கமும் இணைந்திருந்த பகுதிகளில்ல.

1950ம் ஆண்டுவரை அனமதியாக இயங்கி வந்தது இவ் இணைப்பு இயக்கம். 1955க்கும் 1959க்குமிடையில் பெருமளவு அப்பாவி மக்கள்- பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள்- கிரேக்கர்களும், துருக்கியர்களும், ஆங்கிலேயர்களும் மிகக்காட்டு மிராண்டித்தனமாகக் கொல்லப்பட்டனர். இப்பயங்கரத்தில் அகப்படாத ஒரு குடும்பம் கூட சைப்பிரஸில் இருப்பது மிக அருமையாகும்.

அரசியல் யாப்பும் மக்காரியோசும்:-

இறுதியில் பெருந்தொகையான மக்களைக் கொன்று குவித்து விட்டு, கிரேக்கத்தினதும், சைப்பிரசினதும் நெருக்கடியின் கீழ் சைப்பிரஸ் பிரச்சனையில் அங்குமிங்கும் ஊசலாடிக் கொண்டிருந்த மக்காரியோஸ், 1959ல் துரைமார்களுடன் கிரேக்கருக்கும் துருக்கியருக்கும் அதிகாரத்தை பங்கிர்ந்தளிக்கும் அடிப்படையிலான ஜூடியரசு ஒன்றுக்கு ஒப்புக் கொண்டார். இதற்கான அரசியல் யாப்பு வரையப்பட்டது. அதில் இரு சமூகத்தினருக்குமான உரிமைகள் வரையறுக்கப்பட்டன. ஒப்பந்தம் பிரித்தானியாவுக்கும், துருக்கியருக்கும், கிரேக்கருக்கும் இடையே நடைபெற்றது அவை சைப்பிரசின் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தின. தீவில் இரு வேறுபட்ட மக்கள் வாழ்கிறார்கள் என அரசியல் யாப்பு உறுதிப்படுத்தியது. இவ் யாப்பின் பிரதான அடிப்படை என்னவெனில் ஒரு சமூகம் மற்ற சமூகத்தை ஆதிக்கம் செலுத்தவோ பாரபட்சம் காட்டவோ கூடாது என்பதாகும். இதனால் சைப்பிரசில் உள்ள சகலரும் நன்மை பெறுவர், ஒற்றுமையாக வாழ்வர் என எதிர்பார்க்கப்பட்டது. துருக்கியருக்கும் கிரேக்கருக்கும் இடையே நட்பை ஏற்படுத்தியது, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நீக்கவோ, திருத்தவோ, மூடியாதபடி இவ் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டது;

இந்த யாப்பின் படி கிரேக்கர் ஒருவர் ஜனாதிபதியாக வரவும், துருக்கியர் ஒருவர் உபஜனாதிபதியாக வரவும் முடியும். பிரதிநிதிகள் சபையில் பின்வருமாறு பிரதிநிதித்துவம் ஒதுக்கப்பட்டது கிரேக்கர் 70% துருக்கியர் 30% அரசாங்க சேவையிலும் பொலிஸ் பிரிவிலும் இவ் வாறே விகிதாசரம் ஒதுக்கப் பட்டது. இராணுவத துள் 60% கிரேக்கருக்கும் 40% துருக்கியருக்கும் ஒதுக்கப்பட்டது. கிரேக்கமும், துருக்கியும் அரசகரும மொழியாக்கப்பட்டன. இவ்வாறு பல்வேறு ஏற்பாடுகள் சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரச இயந்திரம் கிரேக்கர்களின் கட்டுப்பாட்டின் கீழேயே இன்னும் உள்ளது. ஆகையால் 70/30, 60/40 திட்டவட்டமான விகிதாசார ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் துருக்கியருக்கு தமது பாரபட்சமின்மை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது

வரிச்சட்டங்களை ஏற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதியும் உபஜனாதிபதியும் சேர்ந்தோ, தனித்தோ வீட்டோ அதிகாரம் பாவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அத்துடன் சைப்பிரஸ் கிரேக்கருக்கும் துருக்கிய சமூகத்தவருக்கும் வெவ்வேறு மாநகரசபை அமைப்புகளும் வெகுவிரைவில் ஏற்பாடு செய்யப்படடிருந்தன; ஏனெனில் அதுவரை காலமும் மாநகரசபை இருபகுதியினரையும் கொண்டிருந்தது. இதிலும் துருக்கிய சமூகத்தவரை சைப்பிரஸ் கிரேக்கர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்ததுடன் அவர்களது தேவைகளை முற்றுகை ஒதுக்கியும் வந்தனர்; மேலும் யாப்பானது கிரேக்கருக்கும், துருக்கியருக்கும் தனித்தனியாக இரண்டு இனச் சபைகளை (Communal-Chambers) ஏற்படுத்தியது, அவை உள்நாட்டு இனம் சம்பந்தமான கல்வி, மத நிர்வாகம், குடும்பச் சட்டம் போன்றவை பற்றிய ஈடுபாடு கொள்ளும் அதிகாரம் வாய்ந்தவையாக காணப்பட்டன. வெளிநாட்டவர் ஒருவரின் தலைமையின் கீழ் கிரேக்கர் ஒருவரும், துருக்கியர் ஒருவரும் அங்கம வகிக்கும் வண்ணம் அரசியல் சட்ட உயர் நீதி மன்றம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டிருந்தது, இது நிறைவேற்றதிகார நடவடிக்கைகளின் அரசியல் யாப்பு ஏற்பாடுகளினை ஒழுங்கு படுத்தும் அதிகாரம் வாய்ந்த ஓர் அமெரிக்க உயர் நீதி மன்றம் போல் காணப்பட்டது.

துருக்கியர்கள் புதிய ஆட்சியின் கீழ் அமைவதற்கு உடன்பட்டனர். ஏனெனில் இதனை ஒரு சந்தர்ப்பம் வழங்கலாகக் கருதினர்; ஆனால் மக்காரியோஸ் அவர்கள் மீது நிணிப்பதற்கு வேறு திட்டங்களை வைத்திருந்தார். அவை துருக்கிய சமூகத்தினரின் எதிர்ப்பாற்றல்களை பொருளாதாரச் சிரழிவின் மூலம் உடைத்தெறிந்து இறுதியில் பின்கதவால் (கிரேக்கத்துடன்) இணைக்கும் நடவடிக்கைகளான நீண்டகாலத் திட்டங்களாகக் காணப்பட்டன. மக்காரியோஸ் தனது சொந்தக் கையொப்பம் இடப்பட்ட யாப்பிலுள்ள பெரும் ஏற்பாடுகளினை அமுல் நடத்தாதிருக்கத் தொடங்கினர்.

வரையறைகள் செயலாக்கப்பட்டதா?

1963 இல் பின்வரும் நிலைமைகள் காணப்பட்டன; துருக்கியப் பொலிசார் கடமையிலிருந்து நிற்பாட்டி வைக்கப்பட்டு, தீவு முழுவதும் உள்ள பொலிஸ் படை கிரேக்கரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இராணுவத்தில் முழுமையாக கிரேக்கரே இருந்தனர். அத்துடன் துருக்கியருக்கென ஒதுக்கப்பட்ட தொகை எதுவும் ஒருபோதும் அமுல் நடத்தப்படவில்லை!

அரசியல் சட்ட உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து எதிர்க்கத்தொடங்கினர். நீதிமன்றம் கிரேக்கர்களின் ஆயிரக்கணக்கான மீழக்குகளால் நிறைக்கப்பட்டன, அவை யாவற்றையும் தீர்ப்பதற்கு ஒரு வாழ்நாட்காலம் தேவைப்பட்டது. இந்நிலமையே இயற்கையாக அதிகாரப் பகிர்வுகள் சிதைவதற்கும் இரு இன உறவுகள் தகர்வதற்கும் வழிகோலியது.

கலாநிதி, சலாஹி ஆர். சொனியல்

சைப்பிரஸ் துருக்கியர்கள் நிர்வாகத்தில் அரசியல் ஆலோசராக இருக்கும் இவர், தற்போது லண்டன் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சியாளராக உள்ளார்.

அகதிகளாக வேண்டிய நிலைமை!

1963 டிசம்பரில் சைப்பிரஸ் கிரேக்கர்களின் 'தனிப்பட்ட இராணுவம்' தீவு முழுவதும் சைப்பிரஸ் துருக்கியர்மீது தாக்குதல் நடத்தியது, துருக்கியர்களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எதிர்த்தாக்குதல் நடத்தினர்கள். துருக்கியர்கள், தாம் வாழ்வதற்காக போராடவேண்டியுள்ள நிலையினைக் கண்டுகொண்டார்கள். 1963 க்கும் 1974 க்கும்இடையில் துருக்கிய சமூகத்திற்கு நடைபெற்ற சித்திரவதைகள், கொடுரங்கள், வழிப்பறிகளை இங்கு விபரிப்பதாக இருந்தால் பலபக்கங்கள் தேவைப்படும்.

1964 ம் ஆண்டின் கிறிஸ்மஸ் சண்டையை தொடர்ந்து அழிக்கப்பட்ட 103 கிராமங்களில் இருந்து, சுமார் 25,000 துருக்கியர்கள் தமது இல்லங்களை இழந்து வெளியேறினர்; 60% மானவர்கள் அகதிகளாயினர் இவர்களில் சுமார் 55,000 பேர் துருக்கியின் உணவு மருந்து வகை உதவிகளை நம்பி வாழ்ந்தனர்; அவர்களது இல்லங்கள், வீட்டுஉடமைகள், கடைகள், பழத் தோட்டங்கள், பண்ணைகள் யாவும் கிரேக்க அயலவர்களால் சூறையாடப்பட்டு அழித்தொழிக்கப்பட்டன. இவ் நஷ்டங்களையும், இழப்புக்களையும் கணக்கிட்டால் அவை பலநூறுகோடி ரூபாய்களாகும். சைப்பிரஸ் கிரேக்கர்களின் ஆத்திரத்திலிருந்து துருக்கியர்களின் பாடசாலைகள், பள்ளிவாசல்கள் கூடத் தப்பவில்லை.

உத்தியோகஸ்தர்கள் குடியரசின் உபஜனாதிபதி, மூன்று துருக்கியஅமைச்சர்கள் உட்பட யாவரும் அவர்களின் கடமைகளில் இருந்து, துப்பாக்கி ஏந்திய கிரேக்கர்களினால் தடுத்து நிறுத்தப்பட்டனர். துருக்கிய பகுதியாகிய நிக்கோசியா, கிரேக்க ஆயுத பயங்கரவாதிகளினால் முற்றுகையிடப்பட்டு தடைப்படுத்தப்பட்ட பிரதேசமென பிரகடனப்படுத்தப்பட்டது; துருக்கியர்கள் சரணடைய வேண்டும், இல்லையேல் சகல துருக்கியப் பகுதிகளும் அழிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது; பின்தங்கிய கிராமங்களில் துருக்கியர்கள் இரவு நேரங்களில் துப்பாக்கிச் சூடுகளுக்கும், பயமுறுத்தல்களுக்கும், உள்ளாக்கப்பட்டனர்; அரசின் பொருளாதார தேக்கத்தினால் துருக்கியர்கள் பாதுகாப்பினை இழந்து துருக்கியின் உதவி மானியத்தில் தங்கவேண்டியவர்களாயினர்;

மக்காரியோஸ் ஜனாதிபதியானார்

இவ்வாருன கிரேக்க அரசாங்கத்தின் கொடுமைகளைத் தொடர்ந்து மக்காரியோஸ் சைப்பிரஸ் அரசியல் சட்டத்தினை துண்டுதுண்டாக கிழித்தெறிந்து தம்மை சைப்பிரஸ் குடியரசின் பூரண அதிகாரம் வாய்ந்த ஜனாதிபதியாக, ஆக்கிக்கொண்டார். துருக்கி சைப்பிரஸ் அரசியல் சட்டத்தினை உறுதிப்படுத்திய நாடுகளில் ஒன்று என்ற வகையில், அடுத்து உறுதிப்படுத்திய பிரித்தானியாவை அழைத்ததுடன் சைபிரசில் தலையீடு செய்து கடுமையாக எதிர்த்தது. ஆனால் பிரித்தானிய அரசு அத்தலையிட்டில் இணைந்து கொள்ளவில்லை, அத்துடன் அது சைப்பிரஸ் கிரேக்க நிர்வாகத்தை சட்டரீதியான அரசாங்கம் என்றும் அதன் ஜனாதிபதியை அதன் தலைவர் என்றும் அங்கீகரித்து, தொடர்ந்தும் அங்கீகரித்து வருகிறது.

6ம் பக்கம் பார்க்க

இலங்கையில் தமிழர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17-11-80

ஈழவர் திருநாடு...

இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சனையை அணுகி ஒரு தீர்க்கமான முடிவுகாண வேண்டியது அரசியல் ஆய்விலும் திறனாய்விலும் நம்பிக்கை கொண்ட முற்போக்கு சிந்தனையாளர்களின் முதலாய கடமையாகும்.

முதலில் பிரச்சனை என்னவென்று பார்ப்போம். மொத்தமாக இலங்கையில் நாற்பது இலட்சம் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் தொழிலாளர்களாகவும் பாமரர்களாகவும் வாழ்கிறார்கள். ஒருசிறு நடுவர்க்கத்தினரும் இருக்கின்றனர். இவர்களை எதிர் நோக்கியுள்ள பிரச்சனையைத் தீர்த்தால் அன்றி தமிழர்கள் பிரச்சனை தீர்ந்து விடாது. அப்படித் தீர்வுகாணும் வரை அவர்களின் பிரச்சனைகளை எடுத்துக்கூறி அதற்கான ஒரு தர்க்கீகத் தத்துவ மார்க்கத்தையும் காணவேண்டியது நமது கடமையாகும்.

கடந்தகால இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர்களின் 97%தினரின் பிரச்சனையைப் பிரதிபலித்து, அவர்களுடைய தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அரசியல் பிரமுகர்கள் குரல் எழுப்பவில்லை என்பது நிதர்சன உண்மை. அப்படிக்குரல் எழுப்பி இருந்தால் 1949ம் ஆண்டு தமிழ் தொழிலாளர்களின் அரசியல் உரிமை பறிபோனபோது, அத்தலைவர்கள் தமிழ்த் தொழிலாளர்களையும் பாமரர்களையும் ஒன்று திரட்டி ஒரு பெரிய போராட்டம் நடத்தி தமிழர்கள் பிரச்சனையத் தீர்த்திருக்கலாம். அப்படி நடக்காமைக்குக் காரணம் தமிழர் பிரச்சனை என்னவென்று தீர்க்கமாகச் சிந்திக்கும் திறனும் அதைத் தீர்க்கும் உறுதியான திராணியும் உள்ள தலைவர்கள் இல்லாததே. ஏதோவொரு கஞ்சி வார்க்கும் கருணையுடன் தொண்டு செய்யும் நோக்குடன் கட்சிகளையும் நிறுவனங்களையும் கட்டி எழுப்பினர். தமிழ்க்காங்கிரஸ் மலைநாட்டினரை கைவிட்டனர் என்ற காரணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி தமிழ்த் தொழிலாளரின் பிரச்சனையை எந்தவிதத்திலும் அணுகவில்லை என்பது உண்மை. அப்படித் தமிழரசுப் பிரமுகர்கள் தமிழ்த் தொழிலாளருடன் இறுகப் பிணைத்திருந்தால வடகிழக்கு மாகாண மக்கள் நடத்திய போராட்டத்தில் அவர்களும் பங்கு கொண்டிருப்பர். ஆனால் இதுவரை அப்படி எதுவும் நடக்கவில்லை. இதற்குக் காரணம் இத் தலைவர்கள் தம்முடைய பிரச்சனையையும் தம்மைச் சார்ந்த நடுத்தர வர்க்கத்தினுடைய பிரச்சனையையும் அணுகியதே ஆகும்.

உதாரணத்திற்கு 1960 ம் ஆண்டுத் தேர்தல் பிரச்சாரத்தை எடுத்துக் கொண்டால் அத் தேர்தலில் சிங்கள அரசகரும மொழிச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட அரசாங்க சேவையாளர்களின் பிரச்சனையை மட்டும் பிரதிபலித்துத் தான் குரல் எழுப்பினர்கள். பாமரமக்களின் அல்லது பாட்டாளிவர்க்கத்தின் பிரச்சனையை பிரதிபலித்து குரல் எழுப்பவில்லை. வடகிழக்கு மாகாணங்களில் கஞ்சி கூடக் குடிக்க வழியற்றவர்களின் நிலைமையையோ பயிர்ச் செய்கைக்கு குத்தகைப் பணம் கொடுக்க வழியற்றவர்களின் நிலைமையையோ இல்லை - மலை நாட்டின் தோட்டத்தொழிலாளரின் வேதனக் குறைபாட்டையோ சிந்திக்கக் கூடத்தவறினர்கள். ஆனால் பாமரர்களும், பாட்டாளிகளும், தொழிலாழிகளும்தான் தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பான்மையோர் மட்டுமன்றி முதுகெலும்பும் கூட. இவர்களுடைய நிலைமையைச் சிந்தித்து பிரச்சனைகளைத் தீர்க்க முனைந்திருந்தால் தமிழர்களுடைய பிரச்சனை எப்போதோ தீர்ந்திருக்கும்.

பதிலுக்கு தேர்தல் முடிந்ததும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் தேடுவதிலும், தொலை-பேசி தேடுவதிலும், ஒருசிலருக்கு உத்தியோகம் தேடுவதிலும் காலத்தைக் கழித்தனர். இதுவரை காலம் தமிழர்களுக்குத் தேவையான பொருளாதாரத் திட்டத்தையோ, அல்லது போராட்ட வழிமுறைகளையோ தயார் செய்வதில் அவர்கள் ஈடுபடவில்லை.

1970ம் ஆண்டு சிங்களச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சனை மறைந்து பல்கலைக்கழகத்திற்குள் செல்லமுடியாத மாணவர்களின் பிரச்சனையை மட்டும் பிரதிபலித்து குரலெழுப்பத் தொடங்கினர். இப்படி காலத்திற்கு காலம் தலைவர்கள் தம்முடைய வர்க்கத்தின் பிரச்சனையை எதிர் ஒலித்தார்களே அன்றி, தமிழ் மக்களின் பிரச்சனையை எதிரொலிக்கவில்லை. அப்படி மக்களின் பிரச்சனையைப் பிரதிபலித்து உரிமைக் குரல் எழுப்பி இருந்தால் தமிழ்த் தலைவர்கள் நடத்திய போராட்டம் வெற்றியடைந்திருக்கும் ஆனால் நடந்தது என்ன?

1962ம் ஆண்டு கச்சேரி முன்றலில் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகம் தமிழர்களுக்காக அவர் தம் பிரச்சனையை பிரதிபலித்து நடத்தப் பட்டிருந்தால் ஆட்சியாளர்களின் படைப் பிரிவினர் சத்தியரக்கிரகிகள் மீது கைவைத்த போது நம் மக்கள் கொந்தளித்து எழுந்திருப் பர். அப்பொழுது மதுரைக்கலம்பகம் போல் ஒரு புரட்சியை தமிழர்கள் நடத்தி தமக்கென ஒரு அரசியல் அந்தஸ்த்தை நிர்ணயித்திருப் பார்கள்.

ஆனால் தமிழ் மக்களுடைய அடிப்படை ஜீவாதாரப் பிரச்சனையைப் பிரதிபலித்து யாரும் இன்னும் தர்க்கீக ரீதியில் போராட்டம் நடாத்த முன்வரவில்லை. அப்படியான போராட்டம் எதுவும் தொடக்கவில்லை. போராடம் நடாத்தும் போதுதான் அவர்கள் உறுதியுடன் உழைக்கவும் போராடவும் முன்வருவார்கள். அப்படியொரு போராட்டத்தை தமிழர்களுக்காகத் தமிழர்கள் நடாத்தும் போதுதான் தமிழர்களுக்கென ஒருநாட்டையும் சுபீட்சமான சுதந்திர ஆட்சியையும் நிறுவ முடியும். அப்போது தான் எமது பிரச்சாரத்தின் மூலம் பிறநாடுகளின் கவனத்தையும், ஐ நாவின் அங்கீகாரத்தையும் பெற முடியும். போராட்டம் ஆரம்பிக்கு முன் அவர்களின் நிலையை ஐ. நா வில் அம்பலப் படுத்த முயலுபவர்கள், உலகின் பல நாடுகள் போராட்டம் மூலம் விடுதலை பெற்ற பின்னரும் விடுதலைப் போராட்டம் நடக்கும் போதுந்தான் குரல் எழுப்புகிறார்கள் என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். போராட்டம் தொடங்குவதற்கு முன்பு கூட்டமும் வேடமும் போட்டு பிரச்சாரம் நடாத்தினால் நாம் நம்மையே எதிரிக்கு காட்டிக் கொடுத்தவர்களாக மாட்டோமா?

இலங்கைத் தமிழர்கள் தங்கள் பிரச்சனையைத் தீர்க்க, தீர்க்கமான கொள்கையையும், திடமான கோரிக்கையையும் கொள்ள வேண்டும். கொள்கையும் கோரிக்கையும் சேரும்போது

டியாகோகார்சிகா- மீண்டும் மொரீசியசுக்கு கிடைக்குமா?

இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா தனது செல்வாக்கை, ஆதிக்கத்தை நிலைநாட்ட, பரந்துபட்ட செயல் முறையினைக் கையாள்கின்றது. ஆபிரிக்காவில் கென்யா, சோமாலியா போன்ற நாடுகளுடனும், மத்தியகிழக்கில் ஓமானுடனும், தென்கிழக்காசியாவில் பிலிப்பைன்ஸுடனும், தாய்லாந்துடனும், இராணுவ உடன்படிக்கைகளை ஏற்படுத்தியுள்ளது. இவற்றின்படி அந்நாடுகளின் கடற்படை, விமானத்தளங்களை பயன்படுத்தவும், யுத்த விமானங்களையும், கப்பல்களையும் நிறுத்தவும் முடியும். இந் நடவடிக்கைகளுக்கு மகுடம் இடுவது போல் இந்து சமுத்திரத்தில இலங்கைக்கு நேரே தெற்கே உள்ள - டியாகோகார்சிகா தீவை பிரித்தானியரிடமிருந்து குத்தகைக்கு எடுத்து பெரிய விமானப் படைத் தளத்தை அமைக்கவும், மனித இனத்தையே பூண்டோடு அழிக்கும் அணு ஆயுதங்களை வைக்கவும், உளவறியும் கருவிகளை பொருத்தவும், அத்துடன் இந்துசமுத்திரத்தில் தன் படைப்பிரிவுகளை நிரந்தரமாக நிறுத்தி வைக்கவும், எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது அமெரிக்கா.

எனவேதான் அண்மையில் கூடிய "ஆபிரிக்க ஒருமைப்பாட்டு நிறுவனத்தை" (Organization of African Unity) மொரீசியஸ் தனது தீவான டியாகோகார்சியாவை திரும்பிப் பெற்றுத்தர உதவுமாறு கேட்டுள்ளது.

டியாகோகார்சிகா மொரீசியஸுக்கு சொந்தமானது. பிரிட்டனின் காலனியாக மொரீசியஸ் இருந்த போது டியாகோகார்சிகா அத்துடன் இணைந்த காலனியாக இருந்தது. பிரிட்டன் மொரீசியஸுக்கு சுதந்திர அந்தஸ்து கொடுத்த போது ஒரு உடன் படிக்கையின் கீழ் பிரிட்டனின் தளமாக டியாகோகார்சிகா ஆக்கப்பட்டது. இதற்காக அங்கு வாழ்ந்த மக்கள் பலவந்தமாக மொரீசியஸுக்கு நாடு கடத்தப்பட்டனர். இவர்கள் இன்றும் தாம் அத்தீவுக்கு போவதையே விரும்பி, பிரிட்டிஷார் கொடுத்த நட்ட ஈட்டினை வாங்க மறுத்துள்ளனர். இத் தீவினை பிரித்தானியா அமெரிக்கர்களுக்கு குத்தகைக்கு கொடுத்ததனால் இன்று இத் தீவு அமெரிக்கர்வசம் உள்ளது.

தற்போதைய மொரீசியஸ் பிரதமர் திரு. ஜீவகுருரங்கூலம் இத்தீவினைப் மீண்டும் பெற பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இது விடயமாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சருடனும் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளார். இந்து சமுத்திரத்தை அமைதிப் பிராந்தியமாக்க வேண்டும் என்று விரும்பும் உலக மக்களின் எண்ணம் நியாயமானதே.

கினி-பிஸாவில் ஆ ஜனாதிபதி தடுப்பு

ஆபிரிக்கா கண்டத்தில் சோஷலிச நாடுகளில் ஒன்றான கினி - பிஸாவில் கடந்த வெள்ளியன்று ஆட்சி மாற்றம் நிகழ்ந்துள்ளது. பிரதம மந்திரியான பெர்ணண்டோ வியரி, ஜனாதிபதியான லூயிஸ் கப்ராலின் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. செனகல் நாட்டின் எல்லைப் பறத்திலும் கினியாவின் எல்லைப் புறத்திலும் விளங்கிய இந்நாடு 1974ம் ஆண்டு விடுதலை அடைந்தது. ஐரோப்பிய காலனியாதிக்க நாடுகளில் ஒன்றான போர்த்துக்கல்லின் ஆதிக்கம் 1446ம் ஆண்டு இங்கு ஏற்பட்டது. அங்குள்ள மூலவளங்களைச் சுரண்டி பல்லாண்டு காலமாக ஆதிக்கம் செலுத்தி வந்த போர்த்துக்கல் புரட்சி மூலம் அடித்து விரட்டப்பட்டது.

51லட்சம் மக்களைக் கொண்ட கினிபிஸா, ஆதிக்க வெறியர்களின் கொடுமைக் கெதிராகக் கிளர்ந்தெழுந்து, அவ் ஆதிக்கத்துக் கெதிராக கிளர்ச்சி செய்தது. அம் மக்கள் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிராக P. A. I. G. C என்னும் அணியில் ஒன்று திரட்டப்பட்டனர். சோஷலிச புரட்சியை முன்னெடுத்துச் சென்ற P. A. I. G. Cயின் தலைவராக அமில்கார் கபிரில் விளங்கினர். இவ் அமைப்பு 1963ம் ஆண்டில் அக்காலனி ஏகாதிபத்தியத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தான் இலட்சியமாகி பின் போராட்டமாய் மலரும்: வெறும் கோரிக்கை மட்டும் உள்ளவர்கள் கோட்டையையும், கோட்பாட்டையும் விட்டதையும், வெறும் கொள்கை மட்டும் உள்ளவர்கள் கொட்டாவி விட்டதையும் சரித்திரம் கண்டுள்ளது.

ஈரானிலுள்ளகேடிஸ்மக்களின் முன்னாள் தலைவர் பாஷாணியும் வலது சாரித்தலைமைப் பீடமும் போராட்டத்தைக் கைவிட்டு ஓடி ஒழிந்தது, நமக்கு அனுபவமாக வேண்டும். ஆகவே இலங்கைத் தமிழினம் விடிவுகாண தீர்க்கமான கொள்கையும், திடமான கோரிக்கையும், உறுதியான தலைமையும் வேண்டும். இதை பிற்போக்கு சக்திகளிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. தமிழர்கள் பிரச்சனையை தனியார் பிரச்சனையாக்காமல் வர்க்கப் பிரச்சனை ஆக்க ஒரு தர்க்கீகத் தத்துவம் தேவை. ஆகவேதான் தனிநாடு வேறு, தமிழர்களுக்கு நாடு என்பது வேறு என்கிறோம். சுதந்திரமடைந்த ஸ்ரீலங்கா இன்று சில குடும்பங்களின் தனிச் சொத்தாகிவிட்டது. அது போல் தமிழர் பிரதேசமும் தனியார் சொத்தாகாமல் தமிழர்களின் பொதுவுடமைச் சொத்தாக்க நாம் ஒரு போராட்டம் நடத்த வேண்டும்.

போராட்டம் என்னும் போது அது வெறும் ஜனநாயகப் போராட்டமாகவோ, அல்லது காலத்தோடு ஒவ்வாத, அகிம்சைப் போராட்டமாகவோ இருந்துவிடக் கூடாது. பதிலுக்கு பாமரர் எழுச்சியாக, தொழிலாளர் புரட்சியாக அமைய வேண்டும். அப்படியான ஒரு போராட்டம் மூலந்தான் தமிழர்கள் தமக்கென ஒரு சுயநிர்ணய அந்தஸ்தைப் பெறலாம். அந்த உரிமையையும் உடமையையும் ஒரு சுதந்திர, சமத்துவ, சமுதாய ஆட்சியாக அமைக்கலாம். இந்த அமைப்பையும் ஆட்சியையும் பெருமையுடன் ஈழம் என நாம் அழைக்கலாம்.

அமெரிக்க ஜனாதிபதியும் அண்மைத் தேர்தல் முடிவும்

அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் முடிவுகள் வெளிவந்துவிட்டன. ''றீகன்'' பெரும்பான்மைப் பலத்துடன் குடியரசுக் கட்சியின் பிரதிநிதியாக ஜனாதிபதியாகி உள்ளார். இதுகுறித்து பல அரசியல் விமர்சகர்கள் பிரேத பரிசோதனை நடத்துகின்றனர். அது அவர்களது தொழில், பிழைப்பும்கூட. ஆனால் ஒரு முக்கியமான விடயம் ''தர்க்கீகமாக'' சிந்திப்பவனுக்கு புலப்படுகின்றது.

உலகத்தின் பெரும் ''ஜனநாயக'' நாடாக கருதப்படும் அமெரிக்காவில் மக்கள் நிதர்சன யதார்த்த நிலையை உணராது பாரம்பரிய பெருமைகளில் திளைத்து மீண்டும் அந்நிலையை றீகன் ஆக்குவார் என்றே பெரும்பான்மையினர் கருதியுள்ளனர். ஆனால் அழுகும் முதலாளித்துவத்தின் குணாம்சமான பண வீக்கம், வேலையில்லாத்திண்டாட்டம், விலையேற்றம் என்பவற்றில் இருந்து - திசைதிருப்பி அமெரிக்கரின் கௌரவம், பாரம்பரியம், பெருமைகளை ஊட்டிய முதலாளித்துவ பிரசார சாதனங்கள்-தம்முடைய அபிலாசைகளை நிறைவேற்றிக் கொண்டன.

ஈரானுக்கு எச்சரிக்கை விடுவதாலோ, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் என்பதாலோ, அம்மக்களின் பிரச்சினையை வெறும் அகதிகள் பிரச்சினை என்பதாலோ, சோவியத்துக்கு அறிவுறுத்தல் செய்வதாலோ, கரடி - கரடி,-கம்யூனிசம் என்று புலம்புவதாலோ ''நேட்டோ'' நாடுகளை குளிர்விப்பதாலோதான் அமெரிக்கரின் பாரம்பரியம் நிலைநாட்டப்படுமென ''றீகன்'' நினைபாரேயானால் இது அரசியல் முட்டாள்தனமாகும். றீகனின் வெற்றி தனியே அவரது அரசியல் சாதுரியம், இராஜதந்திரம் - நிர்வாகத்திறமை என்பவற்றினால் கிடைத்ததல்ல - முன்னைய ஜனாதிபதி கார்ட்டரின் பலவீனங்களும், தவறுகளுமே றீகனின் வெற்றியாகும்-இதனை மறந்து முதல் முதல் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டு (1775) பிரித்தானியாபோன்ற ஏகாதிபத்திய - காலனித்துவத்தில் இருந்து-ஏனைய நாடுகள் விடுதலை பெறமுடியும் என்பதனை உலகினுக்கு முதலில் உணர்த்திய அமெரிக்க மக்களை தவறானவழியில் சிந்திக்க வைக்க றீகன் முயலுவது பேதைமையாகும்.

மேலும் இன்னொரு முக்கிய விடயம் இஸ்ரேல் பற்றியது: ஜனாதிபதி தேர்தலுக்கு போட்டியிட்ட மூவருமே இஸ்ரேலின் ஆசீர்வாதத்தை பெறுவதற்கு பெரும் போட்டியிட்டனர். ''இஸ்ரேலின் பாதுகாப்பு அமெரிக்காவின் பாதுகாப்பு'', என்றும்மேலும் பல ஜெட்விமானங்களை அவர்களுக்கு வழங்குவோம்.'' என்றும் பல்வகைக் கோஷங்களை மூவரும் முன்வைத்தனர். சுயேச்சையாக போட்டியிட்ட அண்டர்சன் ஒருபடி முன்னேறி ''ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக்குவேன்'' என அறிவித்தார். இஸ்ரவேலிய சியோனிஸ்டுகளுக்கு (மிலேச்சத்தனமான ஆக்கிரமிப்பாளர்) இவ்வளவு ஆதரவு ஏன். அமெரிக்காவில் உள்ள சியோனிஸ்டுகளான மிகச் சில யூதர்களின் வாக்குகளைகவர்தற்கு மாத்திரமல்ல. அமெரிக்காவில் பெரும் வியாபார, பொதுமக்கள் தொடர்புச்சாதனங்கள் (வானொலி-பத்திரிகை- ரெலிவிசன்) யாவும் இவர்களின் செல்வாக்குக்குள் இருப்பதே பிரதான காரணமாகும்: இவர்களின் ஆதரவுடன் பதவிக்கு வரும் அமெரிக்க ஜனாதிபதி மத்தி கிழக்கில் சமாதானத்தை எப்படி ஏற்படுத்த முடியும்?

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பயங்கரமான இயக்கம் எனக் கருதும் றீகன் மத்திய கிழக்கில் போர் ஒன்று மீண்டும் உருவாவதையே விரும்புகின்றார். மத்திய கிழக்கு தீர்வுக்கு-பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இணைக்காமல்-ஆலோசிக்காமல் எடுக்கப்படும் எந்தமுடிவும் மத்திய கிழக்கில் எந்த அமைதியையும் ஏற்படுத்தாது என்பதனை றீகன் உணர மறுத்துள்ளார். ஏனெனில் சிம்பாவே தீர்வில், அங்குள்ள இயக்கங்களை கலக்காமல் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன பயனை அளித்தன என்பதனை அவர் மறந்து விடுகின்றார், அத்துடன் பாலஸ்தீனப் பிரச்சனைக்கு தீர்வுகாண்பது அம்மக்களின் உரிமை. அதை விடுத்து வெளியார் திணிக்கும் எந்த முடிவும் பயனளிக்காது என்பதனை அவர்கள் பலதடவை உறுதிப்படுத்தியுள்ளனர். இது கிணறு வெட்ட பூதம் வந்த கதையாகத்தான் இருக்கப் போகின்றது.

அத்துடன் அவரது கருத்து அறிக்கைகள் மூன்றாம் உலக நாடுகள் பலம் பெறுவதை விரும்புவதாக தெரிவிக்கவில்லை. புதிய சக்தி உருவாவதை விரும்பாத கீஸிங்கர் போன்றோர் ஆலோசகராகவும், C. I. A. யின் தலைவராக இருந்த ஜோர்ச் புஷ்சை உப ஜனாதிபதியாகவும் கொண்ட றீகன், உலக அமைதிக்கு பெரும் தடங்கல்களை ஏற்படுத்துவார் என்றே கருத வேண்டியுள்ளது.

ஆட்சி மாற்றம் புக் காவலில்!

கதிராக கிளர்ச்சி ஒன்றைச் செய்தது. ஆயினும் துவித பயனும் கிட்டவில்லை.

அம் மக்கள் மீண்டும் தமது போராட்டத்தை விரமாக்கிய போதே 1974 ம் ஆண்டில் அவர்களது ட்சி வெற்றி அடைந்தது. புரட்சியின் மூலம் திய அரசாங்கம் ஏற்பட்ட ஆறாவது வருடத்தில் ட்சிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

அங்கு ஜனாதிபதியாகவிருந்த லுயிஸ் கப்ராலின் ட்சி அதிகாரத்தை பிரதம மந்திரியான மேஜர் பர்னாண்டோ வியரி இராணுவ ஆதவியுடன் கைப்ற்றியுள்ளதாகவும், அச் சனாதிபதி தடுப்புக் காவலில் வக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

மார்க்ஸிச தீவிரவாதியான சனாதிபதியின் அதிரத்தைக் கைப்பற்றி ஆபிரிக்கத் தேசிய அரசு ன்று அமைக்கப்பட்டுள்ளதாக போர்த்துக்கல்லில் ருந்து வெளியாகும் செய்திகள் தெரிவித்துள்ளன.

இவ் ஆட்சி மாற்ற சம்பவத்தில் இரண்டு சிரேஷ்ட திகாரிகள் கொல்லப்பட் டிருப்பதாகவும், அங்கு ரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளதாகவும் லும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்காவில்

ஐ. தே. க. அரசும்- குடியியல் உரிமை பறிப்பும்

ஸ்ரீ லங்காவின் முன்னைநாள் பிரதமர் திருமதி ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் பறிக்கப்பட்ட நிகழ்ச்சி கடந்த மாதத்தில் ஸ்ரீ லங்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. ஈழத்திலும் அதன் பாதிப்பு காணப்படவே செய்தது. அரசியல் நோக்கர்கள் இதனை வன்மையாக கண்டித்துள்ளனர். இன்று இந்நிகழ்ச்சி ஒரு பிரதமராக இருந்தவருக்கு நிகழ்ந்திருக்கலாம். அவர் தவறும் இழைத்திருக்கலாம், ஆனால் ஏறத்தாழ 30 வருடங்களுக்கு முன்பு-1949-ல் இன்று ஆட்சியில் இருக்கும் இக்கட்சியின் முன்னோடிகளால், இலங்கையின் முதுகெலும்பான-அடிப்படை பாட்டாளிவர்க்கமான-10 லட்சம் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இன்று குடியுரிமை பறிக்கப்பட்ட திருமதி ஸ்ரீமாவின் கட்சியும் அன்று ஐ. தே. க. வுடன் இணைந்திருந்த காலத்தில் தான் மலையக மக்களுக்கு இக்கதி ஏற்படுத்தப்பட்டது அன்று இச் சம்பவத்தை எத்தனைபேர் எதிர்த்துக் குரல் கொடுத்தனர், போராடினர் என்பதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதே;

குடியியல் உரிமை என்றால் என்ன? அது பறிக்கப்படும்போது அதன் பாதிப்பு என்ன? என்பதைப் பற்றி இலங்கையில் முற்று முழுதாக புரிந்து கொண்டவர்கள்-அல்லற் படுபவர்கள்: மலையக மக்களே. அம்மக்களின் வாழ்வை படிக்கற்களாக்கி வாழ்க்கை நடாத்தும்-தொழிற் சங்கம் நடாத்தும் சந்தாப் பணக்காரர்-திரு. சௌமியமூர்த்தி தொண்டமான், தனது மந்திரி பதவியை காப்பாற்றிக் கொள்ள அரசுடன் சேர்ந்து வாக்களித்தது மட்டுமல்ல-எதிர்த்து கருத்துக்கூட வெளியிட மறுத்தமை வர்க்க நிலை சார்ந்த தன்மையேயாகும். உலக அரங்கின் கவனத்தை மலையக மக்களின்பால் திருப்ப கிடைத்த சந்தர்ப்பத்தை அவர் தவற விட்டுள்ளார்.

அதே வேளையில் திருமதி சிறிமாவின் குடியியல் உரிமை பறிக்கப்படுவதற்கு திட்டமிட்ட மூளைகள் கொழும்பில் மட்டும் இல்லை. குடியுரிமை பறிப்பு இன்றைய போக்கில் நடந்த சம்பவமே. இன்னும் பல இங்கே நிகழ உள்ளன. அடுத்த சிறி லங்கா சனாதிபதிக்கான தேர்தல் போட்டியில் இன்றைய சனாதிபதியுடன் போட்டியிடக்கூடிய ஒரே ஒருவர் திருமதி பண்டாரநாயக்கா தான் என்பது மறுக்க முடியாது. ஆகவே இவரின் வருகையை ஏகாதிபத்திய வாதிகள் அதிகம்விரும்பவில்லை என்றேகருத வேண்டியுள்ளது. ஏனெனில் முதலீட்டிற்கான லாபத்திற்கும், கடன்களுக்கான வட்டிக்கும், இந்து சமுத்திரத்தில் அதிகார

7ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூதூர் மக்களும் அவர்களின் வேட்கையும்

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதியும் எனது, ஊருமான மூதூரைப் பற்றி கட்டுரையாக இதில் வரைகின்றேன். மூதூரிலுள்ள மக்களைப் பற்றியும், அங்குள்ள நிலைமை பற்றியும் விளக்கு முன்னர், அவ்வூர் எப்படி அமைந்துள்ளது என்பதை சற்று விரிவாக ஆராய்வோம்

மூதூர் பல சிறிய கிராமங்களை உள்ளடக்கியது. இவற்றில் சில சிங்களவர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களாகவும், ஏனையவை தமிழர்கள் வாழும் கிராமங்களாகவும் இருக்கின்றன. இச் சிங்கள ஆக்கிரமிப்புக் கிராமங்கள் அண்மையில்தான் ஏற்படுத்தப்பட்டன. சிங்களவர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களான சேருவாவில, அலியஒலுவ, வெருகல, நீலாப்பல, தெகிவத்த ஆகியன தமிழ் பேசும் மக்கள் வாழும் கிராமங்களைச் சுற்றிவர அமைந்துள்ளன; சுற்றிவர அமைந்துள்ள திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களுக்குள்ளே கிளிவெட்டி, மெயின்காமம், கங்குவேலி, 3ம்கொலனி, மல்லிகைத்தீவு, சேனையூர், சம்பூர், கட்டைபறிச்சான், பள்ளிக்குடியிருப்பு, படடித்திடல், தோப்பூர் ஆதியன அடங்கியுள்ளன.

மூதூர், 1977ம் ஆண்டுக்கு முன்பு இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்து வந்தது. 77ம் ஆண்டுத் தேர்தலின்போது இரண்டு தொகுதிகளாக்கப்பட்டு மூதூர், சேருவாவில என்ப பிரிக்கப்பட்டது. ஒரு ஒழுங்கமைப்புள்ள பகுதி தேர்தல் தொகுதியாயில்லாது நீண்ட வரிசைக் கிரமமான சிங்களவர்களினால் ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களை ஒன்றிணைத்த தொகுதியாக சேருவாவிலயை உருவாக்கினார்கள். இத்தொகுதிக்குள் சில தமிழர்கள் வாழும் கிராமங்களையும் இணைத்துக் கொண்டார்கள். இதன் மூலம் சிங்கள அங்கத்தவர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்ய வழி கோலிக் கொடுக்கப்பட்டது. 1977ம் ஆண்டுக்கு முன்னைய தேர்தல்களில் இரண்டு தமிழ் பேசும் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு வந்ததை இச்சதித்திட்டத்தின் மூலம் முறியடிக்கப்பட்டது. சிங்கள சோசலிச அரசின் இச்சதி வேலைக்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருந்து வந்த தலைவர்களும் உடந்தையாக இருந்ததையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். அதாவது வவுனியாத் தொகுதியில் முல்லைத்தீவைத் தனிமைப் படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த தலைவர்கள் மூதூருக்கு அதனால் துரோகம் இழைப்பதை மறந்ததேனோ! தெரியவில்லை.

இப்படியே நாளுக்குநாள் ஈழமண்ணில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் பாராளுமன்ற உரிமையை தமதாக்கி தமிழ் பேசும் மக்களை அடக்கி, ஒடுக்கி துன்பத்திற்குள்ளாக்குகின்றார்கள். "பாரம்பரிய பிரதேசம் பறி போகின்றதே" என்று கூக்குரலிட்டுக் கொண்டிருக்கும் தலைவர்கள் இத்தகைய செயலுக்கு முகம் கொடுக்கத் தவறுவது ஏனோ!

காடையர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு

மூதூரில் வாழும் மக்கள் பெரும்பாலானோர் விவசாயிகளாவர். இங்குள்ள வயல்களுக்குத் தேவையான நீர் மகாவலிகங்கையில் இருந்து வருடம் பூராவும் கிடைக்கின்றது. இதனால் மூன்று போக விளைச்சலும் செய்கை பண்ணப்படுகின்றன. இங்கு உணவுப் பஞ்சம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இங்கிருந்து வெளியிடங்களுக்கு நெல் எடுத்துச் செல்லப்படுகின்றது. அமைதியும், செழுமையும் நிறைந்த இம் மூதூரில் 1977ம் ஆண்டிலேயே நிலைமை மாறியது. இங்கு வாழ்ந்த தமிழ் பேசும் மக்களுக்கும், குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கும் இடையே கசப்புணர்வுகள் வலுக்கத் தொடங்கியது. இது மூதூர்ப் பகுதிகளில் இனக்கலவரமாக உருவெடுத்தது; தேர்தலின் பின் ஆகஸ்டில் நாடு பூராவும் பெரிய இனக்கலவரம் நடைபெற்றபோது மூதூரில் எதுவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. ஆனால் ஏப்ரல் மாதத்தில் மூதூரில் இடம்பெற்ற இனக்கலவரத்தில் தமிழ் பேசும் மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும், தகர்த்தெறியப்பட்டும் துரத்தியடிக்கப்பட்டனர். இத்தாக்குதல்களினால் ஈடுபட்ட சிங்களக் காடையர்களுக்கு பொலிசார் பாதுகாப்பளித்தனர். காடையர்கள் போக்குவரத்துச் சேவை பஸ்களில் வந்திறங்கி தாக்கியபோது பொலிசாரும் சேர்ந்து தாக்கினர். இதனால் தமிழ் பேசும் மக்கள் தமது உடமைகளை இழந்து அயல் கிராமங்களுக்குத் தப்பி ஓடினர். காடையர்களின் பயங்கரத் தாக்குதல்களுக்கு உட்பட்ட

"அப்துல்லா"

கங்குவேலி, மெயின்காமம், 3ம்கொலனி ஆகிய கிராமங்களிலிருந்து பெரும்பாலான மக்கள் தாக்கப்பட்டுத் தப்பி ஓடினர்.

நமது மண்ணைக் காப்பாற்ற வழி

மூதூரிலிருந்து தமிழர்களை விரட்டி அடிப்பதற்கு அரசாங்க ஆயுதப்படையினரும் சேர்ந்து நின்றார்களே! என்பதைக் கேட்பதற்கு ஆளில்லையாம். ஆனால் வீதிகளில் செல்லும் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து அடித்து துன்புறுத்தி மறியலில் வைக்கும் அதே ஆயுதப்படையினர் தாம் சட்டத்தை நிலைநாட்டுகின்றனராம்!

என்னே விந்தை, தமது உடமைகளையும் சொந்த மண்ணையும் இழந்து திக்குத்திசை தெரியாமல் ஓட்டமெடுத்த மக்களை துப்பாக்கிச் சூட்டுக்கும் பலியாக்கினர். இச்சம்பவங்களினால் பீதியுற்ற மக்கள் தம் வாழ்வில் வெறுப்புணர்ச்சி ஏற்பட்டு தமது சொந்த மண் என்ற வீறாப்புடன் சிலர் நின்று தாக்குதல்களைச் சமாளிக்கத் தொடங்கினர். அப்போதுதான் அம் மக்கள் தங்களுக்கென ஒரு இறுக்கமான, கட்டுப்பாடான, பலமான அமைப்பு இல்லையே! என மனம் வருந்தினர்:

தற்போது அமைதி நிலவுவதாயினும்மறைமுகமாக சிறுசிறு அசம்பாவிதங்கள் நிகழ்கின்றன; தற்போது, குடிபெயர்ந்த மக்கள் மீண்டும் தமது மண்ணுக்கு திரும்பியபோதும் தமது உயிரை பணயம் வைத்தே ஜீவனம் நடாத்திவருகின்றனர்; இச் சூழ்நிலைக்கு மத்தியில் சேருவாவிலயை புனித நகராக்கும் ஜே. ஆர் அரசின் திட்டமும், அதற்கென 20கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. பிரதமர் பிரேமதாசா அல்லைக்-கந்தளாய் பாலத்தை திறந்து வைத்து சேருவாவில திட்டத்தை பிரகடனப்படுத்தியதையும் நாமறிவோம். இப் பாலத்தை அமைத்ததன் மூலம் தென் பகுதிகளிலிருந்து சிங்களவர்கள் மூதூருக்குள் நேரடியாகப் பிரவேசிக்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதனால் நாளுக்குநாள் தமது ஆக்கிரமிப்பு படலத்தை மறைமுகமாக முன்னேற்றி வருவதையும், அத்துடன் தமிழ் மக்களின் உழைப்பைச் சுரண்டுவதற்கு சிங்கள வர்த்தக முதலாளிகளை இலகுவாக ஊடுருவ விட்டதையும் எண்ணி வருந்தாமலில்லை.

எனவே இங்குள்ள சிறுவர் முதல் முதியோர் வரை தாம் இம்மண்ணில் வாழ்வதென்றால் நமக்கென ஒரு தேசிய அந்தஸ்து அவசியம் என்பதில் அசைக்க முடியாத, தீர்க்கமான முடிவுடன் இருக்கின்றனர். இப்படி இருந்தும் தமக்கென ஒரு கட்டுப்பாடான, உண்மையான அமைப்பு வேண்டும் என்பதே அவர்களது கோரிக்கையாகும். இக்கோரிக்கையை நிதர்சனமாக்க அவர்களை ஓரணியில் இணைக்கவேண்டியது முதல் கடமையாகும்.

விடிவைக் காணும்..!

ஓ, தேயிலைச் செடிகளே!
உங்களது இளந் தளிர்கள்
இங்கே பறிக்கப்படுவதனால்
விருப்புப் பானமாய் தேனீர் ஆகின்றீர்

பறிக்கப்பட்டவைகள்
உங்கள் இளந் தளிர்கள்
மட்டுந்தானோ?

எங்கள் குலக் கொழுந்துகளின்
பங்குரிமை அத்தனையும்
பறித்த கதை அறிவீரோ?

பள்ளிப் பருவத்தில் - எம்
கல்விக் குருத்ததனை - பறித்ததனால்
மீளாத அடிமைகளாய் - நாம்பட்ட
பல துன்பம் பாரினில் அறிவீரோ?

இருட்டிலே மிதக்கின்ற
லயத்தினது அறைகளே!
நீங்கள் மட்டும் தானோ
இருளிலே வாழுகிறீர்?

ஏக்கமும் ஏமாற்றமும் - எம்
வாழ்வில் நிறைந்ததனால்
இருட்டிலே நாமும்
இருப்பதனை அறிவீரோ?

இருந்தாலும்,

இருட்டு அறைக்குள்ளே
எரியுது பார் செந்தணல்!
இருட்டைக் கிழிக்க
முயற்சிகள் செய்து
எரியுது பார் அத் தணல்!

சிவந்த தணல்கள்
காட்டும் பாதையில்
நடக்கும் கால்கள் - நாளை
விடிவைக் காணும்!

"இளஞ்சேய்"

3 ம் பக்கத் தொடர்ச்சி

பயங்கர நிலைமைக்கு உள்ளாக்கப்பட்ட துருக்கியர்கள், தமது ஒப்பந்த உரிமையை பாதுகாப்பதற்கு துருக்கிக்கு அழைப்புவிடுத்து, துன்பத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கும் அப்பாவி மக்களைப் பாதுகாப்பதற்கு தலையிடும்படியும் கேட்டுக் கொண்டனர். துருக்கிய கடற்படை அவர்களைப் பாதுகாப்பதற்கு பலத்தடைவைகள் அதன் தளத்தைவிட்டு புறப்பட்டது ஆனால் ஒவ்வொரு தடவையும் அமெரிக்கர்கள் தலையிட்டு அதனை நிறுத்தினர், இறுதியில் துருக்கிய ஜெட் விமானங்கள் துருக்கிய சமூகத்தினருக்கெதிராக மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புகளை உடனடியாக மக்காரியோஸ் நிறுத்தவேண்டும் என்று எச்சரிக்கையிட்டுப் பறந்தன. ஐ நா. வின் சமாதானப் படை, தீவில் நிறுத்தப்பட்டு இருபகுதியினரையும் வேறுபடுத்தி ஒன்றிலிருந்து ஒன்றை பாதுகாக்ககுறிப்பாக கிரேக்கர்கள் மறுபகுதியினரை துன்புறுத்தாது பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் மக்காரியோசும் அவரது நிர்வாகமும் இப் படையின் எந்த அறிவுறுத்தல்களையும் ஏற்றுக் கொள்ளாது தொடர்ந்தும் துருக்கியர்களைத் தாக்கியது; அதே வேளை 1967ல் இருந்து 1974 வரை, மொத்தம் 7 வருடங்கள், சைப்பிரஸ் பிரச்சனைக்கு தீர்வு காணுவதற்காகஇருந்த துருக்கிய பிரதிநிதியுடன் மக்காரியோஸ் பேச்சு வார்த்தையை நடத்தி வந்தார். ஆனால் அவ்வளவு நீண்ட காலம் பேச்சு வார்த்தை நடத்தியதன் உண்மை என்னவெனில் அக்கால இடைவெளிக்குள் துருக்கிய சமூகத்தினரை முற்றாக அழித்துவிடுதல் என்பதாகும்.

பத்து வருடங்களுக்கு மேலாக துருக்கியர்கள் கிரேக்கத் தலைவர்களின் சட்ட விரோத நடவடிக்கைகளை எதிர்த்து வாழ்ந்து வருகின்றனர். 30,000 துருக்கியர்கள் அகதிகளாக்கப்பட்டு இன்று அவர்கள் வீடுவாசல் இன்றி துருக்கியின் உதவியில் தங்கியிருக்கின்றனர். துருக்கி இவர்களுக்காக பல நூறுகோடி ரூபாய்களை செலவழித்து வருகிறது இதனால் துருக்கியின் பொருளாதாரம் சீர்கெட்டு அந்நாடும் சீரழிந்து வருகின்றது.

-தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியா, அடகு.....

[1-ம் பக்கத்தொடர்]

நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வெளிநாட்டு உதவி பெறவும் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உலக வங்கியின் அமைப்பினையும் செயற்பாட்டினையும் நோக்கினாலே உலகவங்கி வழங்கும் நிதியுதவியானது ஏகாதிபத்தியத்திற்கு துணைபுரிவதாக அமைவதை உணரலாம்.

உலகவங்கி

உலக வங்கியில் 127 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த வங்கியில் அங்கம் வகிப்பதாலே அந்நாடுகள் சர்வதேசநாணயநிதி (IMF)யுடன் இணைந்திருக்க வேண்டும். அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டின் பொருளாதார அந்தஸ்தின் அடிப்படையில் உறுப்புரிமை யினைச் (அங்கத்துவ பணம்) செலுத்த வேண்டும். ஆனால், உறுப்புரிமை பணத்தில் 10 வீதத்தைதான் உடனடியாகச் செலுத்த வேண்டும். அதிலும் 1 வீதத்தைத்தான் தங்கமாக அல்லது மாற்றத்தக்க நாணயத்தில் செலுத்த வேண்டும்; மற்றும் 9 வீதத்தை தங்கள் உள்நாட்டு நாணயத்தின் மூலம் செலுத்தலாம். மற்றும் 90 வீதத்தினை தேவை ஏற்படும் நேரத்தில் கொடுத்தால் போதுமானது.

உறுப்புரிமை நிதியின் அளவுக்கேற்ற வீதாசாரத்திலேயே வாக்களிக்கும் உரிமையும் வழங்கப்படும். ஐக்கிய அமெரிக்கா மட்டும் மொத்த வாக்குகளில் 23 வீதத்தைக் கொண்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய நாடுகள் அனைத்தும் இந்த அமைப்பில், பெரும்பான்மை செல்வாக்குக் கொண்டு காணப்படுகிறது. இந்த வங்கியின் நிதியில் 50 வீதத்திற்கு மேற்பட்ட தொகையினைத் தனியார் துறையே வழங்குகிறது.. என்ற உண்மை நோக்கத்தக்கது. இது நீண்ட காலக் கடன்களையே வழங்கும். அதாவது பத்திலிருந்து முப்பது ஆண்டுகால எல்லை. தாங்கள் வழங்கும் கடனுக்கு இது 8 1/2 வீத வட்டி வாங்கிறது. போக்குவரத்து, மின்சக்தி, கைத்தொழில் ஆகிய துறைகளுக்கு உலக வங்கி கடன் வழங்குவதில் கூடிய முதலுரிமை வழங்குகிறது. அதற்கு அடுத்த கட்டத்தில், விவசாயம், தொலைச்செய்தித் தொடர்பு, நீர் விநியோகம், கல்வி, உல்லாசப் பிரயாணம், குடும்பக் கட்டுப்பாடு, நகராக்கம் ஆகிய துறைகளைக் கவனத்தில் கொள்கிறது.

நோக்கம்

பாதைகள் அமைத்தல், மின்சக்தி விநியோகம் போன்ற அடிப்படை அமைப்பு வேலைகளுக்கு உதவுவதையே வங்கி தனது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது; குறைவிருத்தி நாடுகளில் தனியார் எனத்தொழில் முதலீட்டுச் சாதகமான அடிப்படைகளையும் சூழலையும் ஏற்படுத்துவதே இதன் நோக்கம். சில குறைந்தபட்ச அடிப்படைகள் இல்லாமல் கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்வது சாத்தியமில்லை. இதனால் இத்தகைய அடிப்படை அமைப்புக்காக மேற்கொள்ளப்படும் முதலீடுகள் விரைந்து லாபம் தரத்தக்கவை அல்ல. எனவேதான் இந்த முதலீடுகளில் ஆர்வம் காட்டும் உலகவங்கிக்கு தனியார் முதலீட்டுத் துறையினர் போராதரவு காட்டி வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் வாழைச்சேனை, கல்முனை' அக்கறைப்பற்று பஸ்டிப் போக்களை நவீனமயப்படுத்த உலகவங்கி நிதியுதவி அளிக்க முன்வந்திருப்பதை இப் பின்னணியிலே விளங்கிக்கொள்ள வேண்டும்.

உடனடிலாபம்

மேலும் ஏற்கனவே முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட துறைகளிலும் உடனடியாகவும் அதே நேரம் கூடிய லாபத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்க துறைகளில் உலக வங்கி கடன் வழங்க முன்வருகிறது. எண்ணெய் அகழ்வு, தேயிலைப்பெருந்தோட்டங்கள், மீன்பிடி ஆகியவற்றில் உலகவங்கி பெருந்தொகையாகக் கடன் வழங்கி வருகிறது.

மன்னார் கடலில் எண்ணெய்வள ஆய்வுகள் மேற்கொள்ள அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு அனுமதிவழங்கப்பட்டிருப்பதையும், திருகோணமலையில் பெற்றோல் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவ 'பிசாகோ' பல்தேசிய கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதையும் நோக்குதல் பொருத்தமானது. மன்னார், பாரிய எண்ணெய் வளமும் நீண்டகால எண்ணெய் அகழ்வு அனுபவமும் கொண்ட மத்திய கிழக்கு நாடுகள் கூட இன்று பன்னாட்டுக் கம்பெனிகளின் ஆதிபத்தியத்திற்கு எதிராகச் செயற்படாத நிலையிலேயே இன்றும் காரணப்படுகின்றன. இலங்கை போன்ற நாடுகளில் எண்ணெய் அகழ்வு வேலைகளில் இத்தகைய பல்தேசியக் கூட்டுத்தாபனங்களிற் எத்தகைய செல்வாக்கினைக்கொண்டு காணப்படும் என்பதனை ஒருவர் அனுமானிக்கலாம்.

தேயிலை

தேயிலை ஏற்றுமதியின் மூலம் தனது மொத்த அந்நியசெலவாணி வருமானத்தில் 55 வீதத்தைப் பெற்றுக் கொள்ளும் இலங்கை தனது பொருளாதாரத்தில் தன்னிறைவையும் சுயசார்பையும் அடைந்து கொள்ள வேண்டுமெனில் காலனித்துவ பொருளாதார அமைப்பில் இருந்து தன்னை முற்றுக விடுவித்துக் கொள்ள வேண்டும். ஆனால் உலக வங்கியினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் உதவியுடன் அடுத்த வருடத்தில் 25 ஆயிரம் ஏக்கரில் தேயிலை புனர்நடுகைத் திட்டம் மேற் கொள்ளப்பட இருப்பதானது மேலும், மேலும் இலங்கை ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருவதனையும், உணவுப் பயிர்ச்செய்கைக்கு மாறுக காசுப்பயிர்ச்செய்கையினை அபிவிருத்தியுறச் செய்வதன் மூலம் நமது மக்களின் உணவுத் தேவையினை மேலும் மோசமாக்கும் நிலையினையும் உருவாக்கி வரும் எனலாம்.

உலக சந்தையில் தேயிலையின் விலை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் தன்மையினையும், தேயிலைக்கான கிராக்கி மேற்கத்தைய நாடுகளில் வெகுவாக குறைந்து கொண்டு வருவதனையும் தேயிலை உற்பத்தியில் ஆபிரிக்க நாடுகளும் பிறவும் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில் தேயிலை உற்பத்தி அதிகரித்து, அதன் விலை எதிர்பார்ப்பதை விடக் குறைவதனையும் கணக்கில் எடுத்து நோக்கினால் இந்தக் கடன் உதவிகள் எவ்வளவு தூரம் அபிவிருத்திக்கு உதவும் என்பது புலனாகும்.

மன்னாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படுவதற்காக வெளிநாடுகள் உதவி வழங்க முன்வந்திருப்பது தென் அமெரிக்க நாடான ''பீரு'' வில் துரிதமாக, ஆகக் கூடிய அளவில் மீன்பிடியினை அபிவிருத்தி செய்ய முயன்ற நடவடிக்கைகளையே மனதில் தோன்ற வைக்கின்றன. போதுமான மீன்பிடிக்கான வசதிகளையும், மீனவருக்கான பயிற்சிகளையும் வழங்காமல், நவீனமயப்படுத்தப்பட்ட மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதில் அர்த்தமில்லை. மீன்பிடித்துறையில் பொருத்தமில்லாத, நவீனமயமான தொழில் நுட்பங்களை பொருத்தும்போது அதனால் பூரணபயன் பாட்டினை பெற்றுக்கொள்ள முடியாத நிலை [illegible]

செலுத்தும் நிர்ப்பந்தம் நமக்கு ஏற்படுகின்றது.

1979-ம் ஆண்டின் இலங்கையின் (ஸ்ரீலங்கா அரசுபெற்றது) மொத்த வெளிநாட்டுக் கடன், (நிருவாகக் கடன் தவிர) 1584 கோடி ரூபாவாகும். கடன்களுக்காக ஸ்ரீலங்கா அரசு செலுத்தியிருக்கும் வட்டி மட்டும் 163 கோடி ரூபாயாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் சென்ற ஆண்டில் தேயிலை ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட அந்நியச் செலவாணியில் ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும் 30 ரூபாவை வட்டியாக செலுத்தப்பட்டுள்ளது.

1948ம் ஆண்டில் இருந்து சர்வதேச நிறுவனங்கள், மேற்கத்திய நாடுகள் அனைத்தில் இருந்தும், கோடி கோடி ரூபாய்கள் அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட போதும் வடக்கு கிழக்கு விவசாயியும், மலை நாட்டு தொழிலாளியும் தங்களின் நீடித்த துயரார்ந்த வாழ்வில் விடிவுகாண முடியவில்லை யென்பதுதான் நிதர்சன உண்மையாகும்.

ஏகாதிபத்திய நாடுகளும் அதன் நிறுவனங்களும் உதவி யென்ற பெயரில், வளர்ச்சியடையாத நாடுகளில் தங்கள் கைங்கரியங்கள் மூலம் கொள்ளை லாபத்தை எப்படி கொண்டு சென்றன என்பதனை, சி, ஐ, ஏ யினால் (அமெரிக்க உளவு ஸ்தாபனம்) படுகொலை செய்யப்பட்ட ''சிலி'' நாட்டின் ஜனதிபதி தோழர் அலண்டே தன் நாட்டைப்பற்றி கூறிய கூற்றினை படிக்கும் போது மேலும் புரிந்து கொள்வீர்கள்.

''சிலி நாட்டில் செம்பு அகழ்தலில் கடந்த 60 ஆண்டுகளாக ஈடுபட்டிருந்த பல்தேசிய கம்பனிகள் (வெளிநாட்டு நிறுவனங்கள்) திரட்டிய லாபம் 1080 கோடி டாலர்களாகும். (அமெரிக்க பணம்) இது சிலியின் 400 வருடகால மொத்த தேசிய உற்பத்தியான 1050 கோடி டாலர்களை விட அதிகமானது; 400 ஆண்டுகளாக நாம் கட்டிய தொழிற்சாலைகள், வைத்திய சாலைகள், பாலங்கள், பள்ளிக் கூடங்கள் ஆகிய அனைத்தின் பெறுமதியை விட அதிகமானது'

புரட்சியில்.....

[8-ம் பக்கதொடர்ச்சி]

கருதுகிறார்களா? அல்லது புரட்சியை விட தங்களை மேலாக நினைக்கும் மக்களாக இருக்க முடியுமா?

இப்படியான இழிவு எண்ணங்கொண்ட எமது சகோதர சகோதரிகளுக்கு நாம் ஒன்றை மட்டும் கூறமுடியும். ஈழத்திற்கு தற்பொழுது அவர்கள் எப்படித் தேவைப்படவில்லையோ, அதேபோல் பின்னரும் அவர்கள் தேவைப்படமாட்டார்கள்.

இது ஈழத்தின் சோதனைக் காலம். நாளைய சுதந்திர ஈழம் தன்னை வீட்டு ஓடியவர்கள் மீண்டும் வந்து தனது புரட்சியை அசுத்தப் படுத்தவோ, பலவீனப் படுத்தவோ சந்தர்ப்பம் அளிக்க மாட்டாது. இப்படி மூன்றாவது உலக நாடுகளில் நடைபெற்றதை நாம் கண்டு பாடம் கற்றுள்ளோம். அந்தப் பாடம் எமது கவனத்தில் இருந்து கொண்டே இருக்கும்.

வரப்போகும் பயங்கரங்களைத் தாங்கிக் கொள்ள வேண்டிய பலம், எமது நோக்கம் சரியானதும், புனிதமானதும் என்ற அறிவிலிருந்து பிறக்கிறது. எதற்காக நாம் போராடுகிறோம் என்ற சந்தேகம் இன்னும் சிலர் உள்ளங்களில் நிலவுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும். ஆதிக்க வெறியர்களை அடியோடு விரட்டியடிக்கவோ, அல்லது அவர்களை எமது நாட்டில் ஈழமக்களின் பூரண விருப்புகளுக்கு தலை வணங்க வைக்கவோதான் நாம் போராடுகிறோம் என்பதே உண்மை. எமது புரட்சி ஒரு சமூகப் புரட்சி; இந்த வயதிலும் காலத்திலும் ஒரு சமூகப் புரட்சி என்பது சமவுடமைப் புரட்சியாகும். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி ஒன்றை மட்டும் நாம் வைத்திருத்தல் போதாது; எங்களிடம் முதலாளித்துவ எதிர்ப்பு அணியும் இருக்க வேண்டும். எமது சமூகத்தில் நிலவும் சீர்கேடுகளுக்கும், எமது நாட்டின் செல்வத்தின் நீதியற்ற பங்கீடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அந்நியர்கள் வெளியேறிய பின் மற்று மொரு சுரண்டல் வகுப்பினர் உருவாக சந்தர்ப்பம் அளிக்காது மக்களே தங்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தலைவர்களாக மாறும்நிலையை நாம் நிச்சயப் படுத்த வேண்டும்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று, என்னதான் பழம் பாடல் சொன்னாலும் நமக்குள்ள பிரச்சனைகளை நாமேதான் அறிவோம். இந்தவகையில் மூதூர் பற்றிய கட்டுரை அவ்வூர்ப் பிரச்சனையை சுருக்கமாகத் தெரிவிக்கின்றது. இப்படி உங்கள் ஊர்ப் பிரச்சனைகளையும், சூழ்நிலைகளையும் சுருக்கமாகத் தெளிவாகத் எழுதி அனுப்பினால் அதனை 'தர்க்கிகம்' வரவேற்கும். மற்றவர்களும் தெரிந்து கொள்வர்.

—ஆசிரியர்

ஸ்ரீலங்காவில் ஐ. தே. கட்சி

(5-ம் பக்கத் தொடர்)

நிலைநாட்டலுக்கும், தொடர்ந்து செல்வங் குவிப்பதற்கும், வகைசெய்ய வேண்டியுள்ளதான ஏகாதிபத்திய மூலைகளின் திட்டச் செயலாக்கமே இந் நடவடிக்கைகளாகும்; இச் செயலாக்கத்திற்கு தலையாட்டி மொம்மைகளே, ஏகாதிபத்திய தாசர்களே தொடர்ந்தும் - குறிப்பிட்ட காலவரையாகுதல் - ஆட்சியில் இருத்தல் அவசியமென இம் மூலைகள் கருதுகின்றன.

இம் மூலைகளின் கணிப்பின்படி மேற் கூறிய திட்டங்களுக்கு முக்கிய பிரச்சனைகளில் இரண்டை முதலில் தீர்க்க வேண்டுமெனக் கொண்டார்கள். முதலாவது கூர்மையடைந்துள்ள ஈழக் கோரிக்கைக்கான தீர்வு, இரண்டாவது தமது கையாளே தொடர்ந்து சிறீலங்காவின் ஆட்சியில் இருக்க வேண்டுமென்பதற்கான வழிமுறை. முதலாவதற்கு 'மசகுசெட்ஸ்' தீர்மானத்தை நிறைவேற்றி வகை செய்து கொண்டார்கள். இரண்டாவதற்கு குடியுரிமையை பறிக்க வழி அமைத்தார்கள்; மற்றப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் விரைவில் அமுல் நடத்தப்படலாமென்றே நாம் கருதுகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புரட்சியில் மாணவர்.....

புரட்சியில் மாணவர்களின் பங்கு என்ன? குறிப்பாக ஈழ புரட்சியில் ஈழ மாணவர்கள் என்ன பங்கு வகிக்கலாம்? இதில் மாணவர்கள் தாமே தமது இளமைத் துடிப்புடனும், ஆர்வத்துடனும் முன்னெப் பொழுதும் போல் விடை காண வேண்டியவர்களாவர்,

முதலில் ஒவ்வொரு மாணவனும் தன்னைத் தானே கேட்க வேண்டிய கேள்வி, நான் ஒரு புரட்சிவாதியா? தூரதிஷ்டவசமாக இது இலகுவில் விடைகாணக்கூடிய கேள்வி ஒன்றல்ல. இந்தக் கேள்வியை தாங்கள் புரட்சிவாதிகளெனத் தீர்மானித்துக்கொண்டுவிட்ட மாணவர்களிடம் மட்டுமே விட்டுவிடுவோம்.

இதைத் தீர்மானிக்கும் போது உன் விருப்பப்படி தவிர்க்க முடியாத ஓர் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாய். உனது புரட்சிவாத எண்ணங்களை செயல்படுத்த தக்கதொரு நேரத்தையும், இடத்தையும் நீ காத்திருக்க முடியாது.

ஒவ்வொரு புரட்சிவாதியும் மனதில் கொள்ளவேண்டிய குறிக்கோள், ''ஒவ்வொரு புரட்சிவாதியின் கடமையும் புரட்சி செய்வதே'' என்பதாகும். இது மாபெரும் புரட்சியாளன் சேகுவாரா என்பவனால் எமக்கு வழங்கப்பட்டதாகும். மாணவர்கள், மாணவ இயக்கங்களில் நல்ல முறையில அணி திரட்டப்படவேண்டும். ஒரு மாணவ இயக்கம் புரட்சிகரமானதாக இருக்கவேண்டுமாகில் புரட்சிகர மாணவர்களைக் கொண்டிருக்கவேண்டும்:

ஒரு புரட்சிவாதிக்கு புரட்சி அவன் வாழ்வின் ஓர் பகுதி மட்டுமல்லாது அது அவன் முழு வாழ்வே ஆகும்: எனவே புரட்சிகர மாணவர் இயக்கமானது மாணவர்களின் நடவடிக்கையின் தளம் ஆகின்றது:

ஒரு புரட்சிகர மாணவ இயக்கம் தன்னை புரட்சிகர இயக்கத்திலிருந்து பிரித்து தனிப் பாதையில நடத்திச் செல்ல முடியாது.

புரட்சி நடத்தும் ஒரு நாட்டின் புரட்சியில மாணவர் இயக்கமானது புரட்சிகர இயக்கத்திலிருந்து பிரிவதை மாணவர்கள் ஏற்றுக் கொள்ள முடியாது:

புரட்சிகர இயக்கத்தின் பகுதியாக இருந்து நீங்கள் வழி நடத்துபவர்களாகவும் வழிநடத்தப்படுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். புரட்சியின் இயற்கையான எழுச்சியும், வீழ்ச்சியும் இது வரை மாணவர்களின் பிரச்சனையாக இருக்கவில்லை. இது ஒரு புரட்சிகர இயக்கத்தின் பிரச்சனையாகும்:

''இது எனது பிரச்சனை'' என நீங்கள் சொல்லும் பொழுது உங்களால் செய்யக் கூடிய பங்களிப்பினை நீங்கள் மேற்கொள்ள முடியும்: தமது நண்பர்களின் பிரச்சனைகளில் தமது உச்ச முயற்சியினை வழங்கும் ஒவ்வொருவரும் தாமும் தமது சொந்தமான பல பிரச்சனைகளைத் தாங்கிக் கொண்டே இருக்கின்றனர்,

பட்டப் படிப்பின் பின் என்னசெய்யலாம்? எனும் ஈழ மாணவர்களின் வெளிப் பிரச்சினை, புரட்சிகர மாணவ இயக்கத்தில் அங்கத்தவராக இணைவதன் மூலம் மறைந்து விடுகின்றது. புரட்சியில் நீ ஓர் அங்கமாக இருக்கும் போது அது உன்னை ஆட் கொண்டு விடுகின்றது;

ஓரு புரட்சிகர இயக்கத்தில் ஓர் அங்கமாக தான் இருப்பதை தெரிந்துகொண்டே பட்டம் பெற்றபின் என்ன செய்யலாம் என்ற குழப்ப நிலை ஒரு மாணவனுக்கு ஏற்படுமாயின் அவனது புரட்சிகர நோக்கில் ஏதோ பாரதூரமான கோளாறு இருப்பதை அவன் தெரிந்துகொள்ளவேண்டும். அந்தக் கோளாறுகளுக்கான காரணத்தைத் தர்க்கீகமாக ஆராயவேண்டியது அவசியம். மாணவர்கள் புத்திஜீவிகளாக இருப்பதனால் புரட்சிக்கு அவர்கள் அத்தியாவசியமாகின்றார்கள் ஆனால் புரட்சிகர எண்ணங்கொண்ட புத்தி ஜீவிகளாக மாறினால் மட்டுமே புரட்சிக்கு அத்தியாவசியமாகின்றனர்.

சமூக பொருளாதார சீர்கேடுகளைக் களைய உதவும் ஒரே யொரு சாதனமாகக் கல்வியைக் கருதுவதே மாணவர்களின் தற்கால சிந்தனையாக இருக்கிறது. அதன் மூலம் அவர்கள் தங்களை சாதாரண மக்களிலிருந்து விலகி மேல் மட்டத்திலிருந்து சாதாரண மக்களின் வாழ்க்கையை வழி நடத்துபவர்களாக எண்ணிக் கொள்கிறார்கள். படித்தவர்கள் தலைமைப் பதவிகள் வகிக்க தகுதியுடையவர்களென்பது உண்மையாக இருக்கலாம். இருந்தும் தலைமைப் பதவி என்பது உரிமை அடிப்படையில் அமையும் ஒன்றாக அல்லாது பொறுப்பு அடிப்படையில் ஆனது ஒன்றாகும். தலைமையின் சரியான நிலைமை முன்னின்று நடாத்துவதே அல்லாமல் மேலிருந்து அல்ல,

பட்டம் பெறும் மாணவன் பொதுவாக தன்னை புரட்சியில் வழிகாட்டும் சத்தியாகக் கொண்டு போரிடும் பிரிவினர்க்கு திட்டங்கள் வகுக்கும் உயர்மட்ட புரட்சிவாதிகளில் ஒருவனாகக் காண்கிறான். இந்த எண்ணம் தவறானதும் அபாயகரமானதும் ஆகும். புரட்சியென்பது சாய்வு நாற்காலியிலிருந்து நடாத்தக் கூடிய தொன்றல்ல. புரட்சியுடன் சங்கமமாகி ஒரு புரட்சிவாதியாக மாறுதலே புரட்சியை நடாத்துவதற்கான ஆரம்பத் தகையாகும்.

புரட்சியைப் பற்றி எவ்வளவு விளக்கங்கள் அளித்தாலும் ஒருவர் அதைப்பற்றி பூரணமாக விளங்கிக்கொள்ள முடியாது. ஒரு வாகனத்தை ஓட்டுவதற்கு அனுபவம் இன்றி பாதுகாப்பாக ஓட்ட முடியாது. அதே போல் புரட்சியும் வெறும் புத்தகப் படிப்பின் மூலம் அறிந்து விட முடியாது; பிரிவுகள், இழப்புக்கள் ஒருவரால் தாங்கிக் கொள்ளமுடியாத நிலையிலிருந்தும்கூட, புரட்சியின் மத்தியில் நின்று அவற்றைத் தாங்க வேண்டிய எல்லைக்குத் தள்ளப்படும் போதுதான் புரட்சி என்பது என்ன என்று புரிந்து கொள்ளும் நிலை ஏற்படுகிறது. அப்பொழுதுதான் நீ ஓர் புரட்சிவாதி என்று அழைக்கப்படக் கூடிய அளவுக்கு அனுபவம் பெறுகின்றாய்; அங்குதான் நாம் ''சே'' யைப் புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றோம்; அதாவது வாழ்க்கைமீது மிகமிக ஆசை கொண்டுள்ள அதே வேளை அந்த வாழ்க்கைக்காக உயிர் விடவும் ஆயத்தமாகும் ஒரு நிலை.

எமது மாணவர்களிடையே வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்று அந்த அனுபவத்தைக் கொண்டு ஈழத்தில் பின் ஒரு தேதியில் தங்கள் திறமைகள் தேவைப்படும் போது அவற்றைப் பயன் படுத்தலாம் என்ற ஓர் போலி உணர்வு வளர்ந்து வருகின்றது. இந்த மாணவர்கள் தற்போதைய போராட்டத்தில் தங்களுக்குப் பங்கில்லை என்று

(7-ம் பக்கம் பார்க்க)

''தர்க்கிகம்''

சந்தா விபரம்

தனிஇதழ் (அஞ்சல் செலவுடன்) 1-25
அரையாண்டுசந்தா (,, ,,) 7-50
ஓராண்டு சந்தா (,, ,,) 15-00

சந்தாவிற்கான இதழ்கள் தை மாதத்தில் இருந்து அனுப்பிவைக்கப்படும்

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், ''தர்க்கிகம்''
அஞ்சல் பெட்டி எண்-103,
யாழ்ப்பாணம்.

சந்தாவிற்கான பணம் - காசுக் கட்டளையாகவோ (Money Order) அஞ்சல் கட்டளையாகவோ (Postal Order) அனுப்பிவைக்கலாம்.

''தர்க்கிகம்'' இரண்டாவது இதழ் உங்கள் சிந்தனைப் பொறிகளை தட்டிவிட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தன் உள்ளடக்க குணம்சத்தை தெளிவுபடுத்த வேண்டிய அவசியத்தையும்உணருகிறது.

எமது முதல் இதழில் ''தர்க்கிகம் வருகிறது'' என்னும் கவிதையில் உள்ளடக்கத்தை கோடிட்டுக் காட்டியிருந்தோம். வெளிப்பாட்டிலும் கூறியிருந்தோம். ஆனாலும் மேலும் தெளிவாக்க வேண்டியுள்ளோம்.

''வாடிய பயிர் கண்டு வாடினேன்'' என்பது வள்ளலார் என்னும் சமயப் பெருந்தகையின் கவிதை வரிகள், இதில் அவர் வாடிய பயிர் கண்டு வாடுகிறார், நொந்து கொள்ளுகிறார். ஆனால் அவ் வாடிய பயிரினை வளமாக்க அவரது சிந்தனை முயலவில்லை. வழியும் காணவில்லை. ஏன் வாடியது என்பதனையும் ஆராயவில்லை. இதற்கு மாற்றீடாக ஏன் வாடியதென ஆய்ந்து, அதற்கு தண்ணீர் ஊற்றி, உரமிட்டு, பாத்திகட்டி அது வளர வழி காணுவதே தர்க்கிகம்.

இதனையே சமுதாயத்திலும் பொருத்திப் பாருங்கள். இன்றைய அமைப்பில் தான் எத்தனை ஏற்ற இறக்கங்கள். ஒருவன் வாழ – மற்றவன் வாட, பலர் உழைக்க - சிலர் சுவைக்க, சிலர் ஒடுக்க- பலர் ஒடுங்க இப்படியான மாறுபட்ட இரு பெரும் தன்மைகளை கண்டு கொண்டிருக்கின்றோம் அல்லவா? மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் முதல் வேலைப் பிரிவினை எப்போது ஏற்பட்டதோ, என்று பலர் தங்கள் வாழ்விற்காக உழைப்பை விற்க முனைந்தார்களோ அன்றிலிருந்து இத்தன்மை படிப்படியாக கூர்மை அடைந்து கொண்டே வருகின்றது. இம் முரண்பாடுகளைக் களைய பலர் தம் சிந்தனைகளை முன் வைத்தனர். எண்ணங்களை வெளிப்படுத்தினர். சிலர் மதமே மார்க்கமென்றனர், சிலர் கஞ்சி வார்க்கலாமென்றனர். சிலர் சாதி ஒழிப்பு மூலம் தான் என்றனர். ஆனால் எவற்றாலும் இம் முரண்பாடுகளை ஏற்ற இறக்கங்களை செப்பனிட முடியவில்லை. இதுவே தார்மீகம். இதன் வெளிப்பாடே சீர்திருத்தம்.

இதனை மறுத்து இப்பிரச்சனைகளின் அடிப்படை என்ன? இதன் ஆழம் எங்கு வரை சென்றுள்ளது? எந்தத் தளத்தில் நின்று கொண்டிருக்கிறது? ஏன்? எப்படி? ஏற்பட்டது என்பதனை, தனித்தும் – தொகுத்தும் ஆய்ந்து, அவற்றிடையே உள்ள ஒருமைப்பாட்டை - உறுதிப் பாட்டை கண்டு இதனைத் தகர்க்க ''இயங்கியல்'' அடிப்படையில் வழியமைத்துத் தந்தானே மனிதகுலத்தின் மாபெரும் போதகன் - தத்துவ வித்தகன். அந்த வழியினை அடியொற்றியதே தர்க்கிகம். அதன் வெளிப்பாடே புரட்சி.

உங்கள் ஆக்கங்களை 'தர்க்கிகம்' வரவேற்கின்றது. அதே வேளையில் தர்க்கிகத்தை நீங்கள் திறனாய்வு செய்யலாம். அதன்மூலம் 'தர்க்கிகம்' மேலும் தன்னை செழுமைப்படுத்திக் கொள்ளும். உங்கள் ஆக்கங்கள் உங்கள் சமூக நிலையை எடுத்துரைப்பவையாகவும் சமூக மாற்றத்தை கோருபவையாகவும் அமையட்டும்:

''தர்க்கிகம்''
த. பெ. எண்: 103, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை ஊரெழு கிழக்கு, எஸ். விக்னேஸ்வரன் அவர்களால், யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 226ம் இலக்க இடத்திலுள்ள ஆனந்தர அச்சகத்தில் அச்சிடுவித்து வெளியிடப்பட்டுள்ளது.